# திரும்பிப் பார்த்த ஓவியம்



## ராஜேஷ்குமார்

## 1



அந்த வெளிநாட்டு க்ரே வண்ணக் கார் வெட்டிய வெண்ணெய்க் கட்டியாய் அண்ணா சாலையில் - பெய்து கொண்டிருந்த மழையில் வழுக்கிக் கொண்டிருந்தது. நேரம் பதினோரு மணி. சாலை, பதவிபோன மந்திரியின் வீடு மாதிரி வெறிச்சோடிப் போயிருந்தது.

காரை ஓட்டிக் கொண்டிருந்த நபர்க்கு நாற்பது வயது இருக்கலாம். ஃபுல் சூட்டில தெரிந்தார். புஷ்டியான முகத்தில் - மேலுதட்டின் மேல் சன்னமாய் கோடு இழுத்த மாதிரி மீசை. அடர்த்தியான கிருதா. அதில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நரை.

வேகமாய் போய்க் கொண்டிருந்த கார் தியாகராய நகர் போகும் பிரிவுக்கு வந்ததும் சிவப்பாய் இண்டிகேட்டரை போட்டுக் கொண்டு திரும்பியது. முன்புறக் கண்ணாடியில் வைப்பர்கள் மாறி மாறி நீரை வழிக்க - நீர் ஒட்டாத கண்ணாடிப் பகுதியில் சாலையின் துல்லியம் தெரிந்தது.

நிசப்தமாய் வெறிச்சோடிப் போயிருந்த - ஜி.என்.செட்டி சாலையில் காரை விரட்டி - போக் ரோட்டில் வளைத்து அரை கிலோ மீட்டர் தூரம் உள்ளே போனதும் - அசோக மரங்களுக்கு இடையில் தெரிந்த பங்களாவுக்கு முன்பாய் நிறுத்தி ஹாரனை அழுத்தினார்.

பியானோ கட்டையை அழுத்தியது போன்று ஹார்ன் சத்தம். சத்தத்தைக் கேட்டதுமே கேட்டின் விக்கெட் டோர் சின்னதாய் திறந்து ஒரு முகம் எட்டிப் பார்த்தது. மஞ்சள் கிழங்காய் கூர்க்காவின் முகம்.

''கோன்...?''

மழைக்கோட்டைப் போர்த்திக் கொண்டு கூர்க்கா வெளியே வந்து அந்தக் காரின் ரெஜிஸ்ட்ரேஷன் நெம்பரைப் பார்த்ததும் - சட்டென்று விறைப்பிற்கு வந்து சல்யூட் அடித்தவன் ஓடிப்போய் - அந்த பிரம்மாண்ட கேட்டை இரண்டு கைகளாலும் தள்ளி வழி ஏற்படுத்திக் கொடுக்க -

கார் உள்ளே போய் - அந்த பரந்த போர்டிகோவில் நின்றிருந்த நான்கு கார்களுக்குப் பின்னால் போய் நின்று நிசப்தமாயிற்று.

பங்களாவுக்கு உள்ளேயிருந்து - அந்த இரவு நேரத்திலும் சற்று அதிகப்படியான மேக்கப்போடு இருந்த அந்த பெண்மணி காதுவரை இளித்துக் கொண்டு வந்தாள்.

''வாங்க... ஹாசன் ஸார்...''

ஹாசன் இறங்கினார்.

''போன் என்னாச்சு பரிமளம்...?''

''அது ரெண்டு நாளா டிஸ் ஆர்டர்... பெய்யற மழை அப்படி...! போன் பண்ணியிருந்தீங்களா?''

''ஆமா...ஷேக் துபாயிலிருந்து உன்கூட பேச ட்ரை பண்ணினார். லைன் கிடைக்கலை...''

''ஷேக் சென்னை வந்திருக்காரா...?''

''அவர் வராமே நான் இந்த பங்களாவுக்குள்ளே காரைக் கொண்டு வர முடியுமா...?'' சிரித்துக் கொண்டே போர்டிகோ படியேறிய ஹாசன் கேட்டார். ''ரம்யமாலா தூங்கறாளா...?''

''இல்ல ஷூட்டிங் போயிருக்கா...''

''ஷூட்டிங்கா...? உம் பொண்ணை பத்து மணிக்கு மேல எந்த ஷூட்டிங்கிலும் கலந்துக்க விட மாட்டியே...?''

''இது கொஞ்சம் பெரிய கம்பெனி. பெரிய பட்ஜெட் படம். படம் தீபாவளிக்கு ரிலீஸாகணும்...அதான்...!''

''எத்தனை மணிக்கு வருவா...?''

''இப்ப அரைமணி நேரத்துக்குள்ளே வந்துடுவா...''

பரந்த ஹாலில் பிரவேசித்து - சோபாவில் சாய்ந்தார் ஹாசன். ''நீ அரை மணி நேரம்னு சொன்னா... அது ஆறு மணி நேரமாயிடும். ஷேக் ஆசையா காத்திட்டிருக்கார்.... நாளைக்கே அவர் துபாய் கிளம்பணும்...''

''எப்படியும் வந்துடுவா ஹாசன் ஸார்...''

''லேட்டானா ஷேக் எரிச்சலாயிடுவார்... எந்த ஸ்டுடியோவில ஷூட்டிங்...?''

''ஓரியண்ட்... ஸ்டுடியோ...''

''கேள்விப்படாத பேரா இருக்கே...?''

''புது ஸ்டுடியோ. ரோஹிணி கார்டன்ஸுக்கு பக்கத்துல இருக்கு...''

''ரம்யமாலாவுக்கு மொதல்ல போன் பண்ணு. வயித்துவலின்னு சொல்லி ஷூட்டிங்கை கான்ஸல் பண்ணிட்டு வரட்டும்.''

''போன்தான் ஒர்க் பண்றதில்லையே ஹாசன் ஸார்...?''

''உன் பங்களாவுக்கு எதிர்த்தாப்லதான் ஒரு டெலிபோன் பூத் இருக்கே... அங்க போய் பண்ணிட்டு வா...''

''ரெண்டு நிமிஷத்துல வந்துடறேன்...'' சோபாவின் மேல் கிடந்த சால்வையை எடுத்து போர்த்திக் கொண்ட பரிமளம் கேட்டாள்:

''மழைக்கு சூடா ஏதாவது சாப்றீங்களா?''

''ஷெல்ப்ல என்ன வெச்சிருக்கே...?''

''ப்ளாக் அண்ட் ஒயிட் ஸ்காட்ச்...''

''மொதல்ல போன் பண்ணிட்டு வா... ரெண்டு பேரும சேர்ந்து சாப்பிடுவோம்...''

''அதுவும் சரிதான்...''

சிரித்துக் கொண்டே வெளியேறினாள் பரிமளம். போர்டிகோவையும், தூறுகிற மழையில் வாசலையும் கடந்து காம்பௌண்ட் கேட்டுக்கு வந்தாள். கூர்க்கா எழுந்து நின்று ''மேடம்'' என்று கேட்க - அவனை பொருட்படுத்தாமல் விக்கெட் டோரைத் திறந்து கொண்டு வெளியே போனாள்.

ரோட்டைக் கடந்ததும் நேர் எதிரே அந்த டெலிபோன் பூத். தூறலில் நனைந்தபடி உள்ளே நுழைந்து - ரிஸீவரை எடுத்துக் கொண்டு - டயலில் எண்களைத் தட்டி - இணைப்பு கிடைத்து 'ஹலோ' குரல் கேட்டதும் - கையில் வைத்திருந்த ரூபாய் நாணயத்தைப் போட்டு - பேசினாள்.

''நான் ரம்யமாலாவோட அம்மா பரிமளம்...''

மறுமுனையில் குரல் பரபரப்படைந்தது.

''அம்மா... நீங்களா... நான் ஸ்டுடியோ ஃப்ளோர் மானேஜர் பேசறேன்...''

''பாப்பாவை கொஞ்சம் பேசச் சொல் லுங்க...''

முழுசாய் ஒரு நிமிஷ நேரம் கரைந்த பிறகு - ரம்யமாலாவின் ரம்யமான குரல் கேட்டது.

''என்னம்மா...?''

''சீக்கிரமா வந்துடு...''

ரிஸீவரை வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

இருதயம் 'களுக்'கென்றது.

தூறிக் கொண்டிருந்த மழையில் ரெயின் கோட் அணிந்த அந்த ஆள் உயரமாய் நின்றிருந்தான். தலையில் மஞ்சள் நிற ப்ளாஸ்டிக் தொப்பி. கண்களில் சிவப்புக் கண்ணாடி - மூக்கின் நுனியும் தாடையும் மட்டுமே தெரிந்தது.

கரகரத்த குரலில் கேட்டான்.

''போன் சரியா ஒர்க் பண்ணுதுங்களா?''

''ம்...''

''நீங்க ரம்யமாலாவோட அம்மாதானே...?''

''ம்...'' என்றபடி வேகவேகமாய் ரோட்டைக் கடந்தாள். காம்பௌண்ட் கேட்டின் விக்கெட் டோரைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். ஸ்டூலில் உட்கார்ந்திருந்த கூர்க்கா எழுந்து நின்றான்.

''ராம்லால்...''

''மேடம்...''

''எதிர் டெலிபோன் பூத்துக்குப் பக்கத்துல மழைக்கோட்டு போட்டுகிட்டு ஒருத்தன் நின்னுட்டிருக்கான். ஆளைப் பாத்தா சந்தேகமாயிருக்கு. கொஞ்சம் கவனி.''

கூர்க்கா விக்கெட் டோர் வழியாய் எட்டிப் பார்த்து விட்டு பரிமளத்திடம் திரும்பினான். ''யாரும் இல்லையே மேடம்...''

''நல்லா பாரு...''

மறுபடியும் பார்த்துவிட்டு அவளை ஏறிட்டான்.

''இல்ல மேடம்...''

''பூத்துக்குள்ளே நின்னுட்டிருக்கானான்னு பாரு...''

''பூத் கதவும் தொறந்திருக்கு... உள்ளேயும் யாரும் இல்லை மேடம்.''

பரிமளம் கதவின் வழியே எட்டிப் பார்த்தாள். டெலிபோன் பூத்தும் அதைச் சுற்றியுள்ள இடமும் வெறிச்சென்றிருந்தது.

அந்த ரெயின்கோட் ஆசாமி அதற்குள் எங்கே போனான்...?''

''மேடம்...''

''என்ன...?''

''நா வேணும்ன்னா அந்த தெரு முனை வரைக்கும் போய் பார்த்துட்டு வரட்டுமா...?''

''வேண்டாம்... நீ இங்கேயே இரு... கேட்டை விட்டு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் போயிடாதே...''

கூர்க்கா தலையாட்ட பரிமளம் உள்ளே போனாள். வாசலைக் கடந்து போர்டிகோ படியேறி - ஹாலுக்குள் நுழைந்தவள் ஆச்சரியப்பட்டாள்.

ஹால் சோபா வெறிச்சிட்டது.

ஹாஸனைக் காணோம்.

ஹாலின் மையத்திற்கு வந்து சுற்றும் முற்றும் பார்த்தாள். 'எங்கே போனார் அந்த ஆள்...?'

குரல் கொடுத்தாள்.

''ஹாஸன் ஸார்...''

பதிலில்லை.

''ஹாஸன் ஸார்...''

குரல் கொடுத்தவளின் பார்வை ஏதேச்சையாய் டீபாய்க்கு கீழே போக - சலவைக்கல் தரையில் - தெளித்த மாதிரியான தினுசில் ஸ்டிக்கர் பொட்டுக்களைப் போல் - அந்த ரத்தத்துளிகள் தெரிந்தன.

## 2



நடுங்கும் பார்வையோடு - சலவைக்கல் தரையில் தெளித்திருந்த அந்த சிவப்புத் துளிகளைப் பார்த்தாள்.



'இது ரத்தம்தானா...?'

உற்றுப் பார்த்தாள்.

ரத்தம்தான்.

போன நிமிஷம்தான் சிந்தியிருக்க வேண்டும். ஈரத்தின் பளபளப்பு ஒவ்வொரு துளியிலும் தெரிந்தது.

'ஹாசனுக்கு என்னாயிற்று...?'

பரிமளத்துக்கு வயிறு பிசைய ஆரம்பித்த அதே வினாடி -

ஹாலின் இடது பக்க மூலையில் அந்த நடைச் சத்தம் கேட்டது.

டக்... டக்... டக்...

சீரான பூட்ஸ் சத்தம்.

திடுக்கிட்டு போய் திரும்பினாள்.

ஹாஸன் வந்து கொண்டிருந்தார். இடது கை பெருவிரலில் ஒரு துணிக்கட்டு.

''ஹாஸன் ஸார்... எங்கே போயிட்டீங்க?''

''நீ போன் பண்ண வெளியே போனதும் சின்னதா ஒரு ரத்த சேதம்.''

''ரத்த சேதமா...?''

''ஆமா... டீபாய் மேல இருந்த ஆப்பிளை எடுத்து நறுக்கும்போது கத்தியோட முனை பெருவிரல்ல பட்டு ரத்த சேதம். உடனே டாய்லட் வாஷ்பேஷினுக்கு போய் - விரலைக் கழுவி - ஈரக் கர்ச்சீப்பை சுத்திட்டேன். ரத்தம் வர்றது இப்ப நின்னுடுச்சு....''

''ஹம்மாடி...!''

நிம்மதி பெருமூச்சு விட்டு - நெஞ்சில் கை வைத்தாள் பரிமளம். ''கொஞ்ச நேரத்துல நான் பயந்தே போயிட்டேன்...''

ஹாசன் சிரித்தார்.

''இதுல பயப்பட என்ன இருக்கு...?''

''போன் பண்ணிட்டு பூத்தைவிட்டு வெளியே வரும்போது ஒரு உயரமான மழைக் கோட்டு ஆளைப் பார்த்தேன். அவனோட பேச்சும் பார்வையும் ஒரு மாதிரி வித்தியாசமா இருந்தது. அந்த பயத்தோடவே உள்ளே வந்தேன்...''

''ரத்தத்துளிகளைப் பார்த்ததும் பயந்துட்டியாக்கும்...?''

''ஆமா...''

''ரம்யமாலா போன்ல கிடைச்சாளா?''

''கிடைச்சா...''

''விஷயத்தை சொன்னியா?''

''சொன்னேன்.''

''என்ன சொன்னா?''

''இந்நேரம் புறப்பட்டு வந்துட்டிருப்பா... இருபது நிமிஷத்துக்குள்ளே வந்து சேர்ந்துடுவா...''

''அவ வர்றதுக்குள்ளே ரெண்டு பெக் ஸ்காட்ச்சை சாப்பிடலாமா...?''

''ம்... கொண்டு வர்றேன்...''

உள்ளே போய் ஸ்காட்ச் பாட்டிலோடும் இரண்டு கண்ணாடி டம்ளர்களோடும் பரிமளம் வெளிப்பட்டாள். ஹாஸன் சிகரெட் பற்ற வைத்திருந்தார்.

''ஸ்மாலா... லார்ஜா....?''

''லார்ஜ்...''

கண்ணாடி டம்ளர்களில் 'களகள'வென்ற சத்தத்தோடு ஸ்காட்ச் விரலளவு இடம் பெற்றது. அவள் சோடாவை கலக்கும்போது - ஹாஸன் தன் கையிலிருந்த சிகரெட்டின் நுனி சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டிக் கொண்டே கூப்பிட்டார்.



''பரிமளம்...''

''ம்...''

''ரம்யமாலா வர்றதுக்குள்ளே உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி பேசணும்...''

''என்ன ஸார்...?''

''ஷேக்குக்கு சென்னையில் சொந்தமாய் இருக்கிற பட்டினப்பாக்கம் கடற்கரை பங்களாவை உம் பொண்ணுக்கு எழுதி வெக்க ஆசைப்படறார்.''

பரிமளம் மகிழ்ச்சியில் கண்கள் பளபளத்தாள்.

''நி... நிஜமாவா ஸார்?'' கையில் வைத்திருந்த சோடா பாட்டில் சந்தோஷத்தில் தளும்பி சிந்தியது.

''ஷேக் பொய் சொல்ல மாட்டார்ன்னுதான் உனக்குத் தெரியுமே?''

''ரம்யமாலா அதிர்ஷ்டக்காரி...''

''ரம்யமாலா அதிர்ஷ்டக்காரியா இருக்கணும்ன்னா அவ ஷேக்குக்காக ஒரு உதவி பண்ண வேண்டியிருக்கும்.''

''என்ன உதவி...? ஷேக்குக்காக ரம்யமாலா எந்த உதவியும் செய்யத் தயாராயிருப்பா....''

''இது கொஞ்சம் வித்தியாசமான உதவி...''

''புரியும்படியா சொல்லுங்க ஹாஸன் ஸார்...'' சொன்ன பரிமளம் விஸ்கியும் சோடாவும் கல்யாணம் செய்து கொண்ட டம்ளரை எடுத்து ஹாஸனிடம் நீட்ட அவர் வாங்கிக் கொண்டு சியர்ஸ் சொல்லி ஒரு வாய் சப்பினார். குரலை தாழ்த்திக் கொண்டு சொன்னார்.

''ஷேக் சென்னை வரும்போதெல்லாம் உன்னோட மக அவர்க்கு உடம்பு சுகம்

கொடுக்கிறது பெரிசில்லை. ரம்யமாலா துபாய்க்கே போய் ஒரு வருஷம் தங்கியிருந்து அவர்க்கு ஒரு குழந்தையை பெத்துக் கொடுக்கணும்.''

பரிமளம் நிமிர்ந்தாள்.

''எ...என்னது...? ஷேக்குக்கு ஒரு குழந்தையை பெத்து தர்றதா...?''

''ஆமா... மனைவியை இழந்துட்ட ஷேக் ரெண்டாவதா ஒரு கல்யாணம் பண்ணிக்க விரும்பலை... குழந்தைகள் எதுவும் இல்லாத அவர் ஒரு குழந்தையை தன் வாரிசாய் தத்து எடுத்துக்கவும் விரும்பலை... தன் சொந்த ரத்தத்திலேயே பிறந்த குழந்தையா இருக்க ணும்ன்னு நினைக்கிறார். ரம்யமாலா மூலமா பொறக்கப் போகிற குழந்தை அது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி... அழகா சிவப்பா ஆரோக்கியமா இருக்கும்ன்னு நம்பறார்...''

பரிமளம் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு பின் ஹாஸனை ஏறிட்டாள்.

''இதுக்கு ரம்யமாலா ஒத்துக்குவாளா மாட்டாளான்னு தெரியலை.''

''நீதான் ஒத்துக்க வைக்கணும்...''

''பத்து நாளைக்குள்ள தகவல் சொன்னா போதுமில்லையா?''

''போதும்...''

''ரம்யமாலா நல்ல மூடில் இருக்கிறப்ப அவகிட்ட இதைப்பத்தி பேசி சம்மதம் வாங்கிடறேன்...''

''இந்த திட்டத்துக்கு ரம்யமாலா ஒத்துக் கலைன்னா ஷேக் வேற ஒரு நடிகைக்கு அந்த சான்ஸை கொடுக்கப் போறார். அதுக்கப்புறம் நீயும்



உம் பொண்ணும் ஷேக் பேர்லேயோ என் பேர்லேயோ வருத்தப்படக் கூடாது.''

''ரம்யமாலாவை ஒத்துக்க வைக்க வேண்டியது என்னோட பொறுப்பு ஹாஸன் ஸார்.''

அவர்கள் பேசிக் கொண்டே -

இரண்டாவது லார்ஜை முடித்திருந்தபோது காம்பௌண்ட் கேட் வாசலில் கார் ஹார்ன் சத்தம் கேட்டது.

''பாப்பா... வந்துட்டா...''

பரிமளம் எழுந்து வாசலுக்கு போக - போர்டிகோவில் வந்து நின்ற காரிலிருந்து ரம்யமாலா இறங்கினாள்.

அழகாக இருந்தாள். ஒரு நடிகைக்கு தேவையான எல்லா சங்கதிகளும் உடம்பில் அற்புதம் காட்டின. உருவிவிட்ட மாதிரியான உடம்புவாகில் சதை எங்கெங்கு திரட்சி காட்ட வேண்டுமோ அங்கெல்லாம் கோலாகலம் காட்டியிருந்தது. மேக்கப் முகத்தில் மிச்சமிருந்தது.

பரிமளம் கேட்டாள்.

''டைரக்டர்கிட்டே என்ன சொல்லிட்டு வந்தே...?''

ரம்யமாலா சிரித்தாள்.

''அந்த மூன்று நாட்கள்...''

''மனுஷன் நம்பிட்டானா...?''

''நம்பாமே...!''

உள்ளே வந்தாள்; ஹாஸனைப் பார்த்து மலர்ந்தாள்.

''வாங்க ஸார்...''

''சீக்கிரமா பர்தாவை மாட்டிகிட்டு கிளம்பு ரம்யா... ஷேக் அங்கே காத்திட்டிருக்கார்...''

''ஹோட்டல் 'சம்பர் ப்ரீஸ்'தானே...?''

''ஆமா... கிளம்பு...''

''ஒரு நிமிஷத்துல வந்துடறேன்...''

உள்ளே ஓடினாள்.

பரிமளம் ஹாசனை ஏறிட்டாள். ''ஹாஸன் ஸார்...! ஷேக்கோட குழந்தை ஆசையைப் பத்தி ரம்யாகிட்டே பேச்சை எடுத்துடாதீங்க... நான் அவளுக்கு பக்குவமா எடுத்துச் சொல்லி சம்மதிக்க வைக்கிறேன்...''

''சரி... ஆனா ரெண்டு வாரத்துல எனக்கு முடிவு தெரியணும்...''

''தெரியும். ரெண்டு வாரம் கழிச்சு போன் பண்ணுங்க. நல்ல முடிவா சொல்றேன்...''

ஹாசன் தன் கோட் பாக்கெட்டிலிருந்து ஐந்நூறு ரூபாய் நோட்டுக் கற்றைகளை எடுத்து - டீபாயின் மேல் போட்டார்.

''எடுத்துக்க பரிமளம்... இன்னிக்கு ராத்திரி ஷேக் ரம்யாவோடு இருக்கப் போறதுக்கான கூலி.''

''எவ்வளவு இருக்கு....?''

''ஒரு இலட்சம்...''

''இன்னொரு கட்டை போடறது...''

''போதும்... பாதி ராத்திரி இப்பவே போயாச்சு...''

ரம்யமாலா பர்தா அணிந்து கொண்டு வந்தாள்.

''கிளம்பலாமா ஸார்...?''

''ம்...''

ஹாஸன் டம்ளரில் மிச்சமிருந்த ஸ்காட்ச்சை ஒரே மூச்சில் குடித்துவிட்டு எழுந்தார்.

வெளியே வந்தார்கள்.



காத்திருந்த அந்த டாட்ஸன் கார்க்குள் பின்சீட்டை ரம்யமாலா ஆக்ரமிக்க ட்ரைவிங் சீட்டில் ஹாஸன் உட்கார்ந்தார்.

பரிமளம் குனிந்தாள்.

''ஹாஸன் ஸார்... பாப்பாவை அருக மணிக்கெல்லாம் கொண்டாந்து விட்டுடுங்க...''

''புதுசா... நீ சொல்றியா...? எனக்கு தெரியாதாக்கும். வழக்கம் போல விடியறதுக்கு முந்தி உம் பொண்ணு வீட்ல இருப்பா...''

சின்னதாய் புகை கக்கி நகர்ந்தது டாட்ஸன்... தூறிக் கொண்டிருந்த மழையில் வெளியேறி - கூர்க்கா திறந்து விட்ட காம்பௌண்ட் கேட்டைக் கடந்து ரோட்டுக்கு வந்தது. போக் ரோட்டைக் கடந்ததும் ஹாஸன் கூப்பிட்டார்.

''ரம்யா...''

''என்ன ஸார்...?''

''உங்க அம்மாகிட்டே அந்த விஷயத்தைப் பத்தி பேசிட்டேன்.''

''எந்த விஷயத்தை?''

''ஷேக்குக்கு நீ குழந்தை பெத்துக் கொடுக்கப் போகிற விஷயத்தை.''

''அம்மா என்ன சொன்னா...?''

''ஒரு நிமிஷத்துக்கு ஆடிப்போயிட்டா... அப்புறம் சுதாரிப்புக்கு வந்து ரம்யா நல்ல மூடில் இருக்கும்போது - பேசி சம்மதம் வாங்கறேன்னு சொல்லியிருக்கா. உன்கிட்டே அவ பேச்சை ஆரம்பிக்கும்போது - கொஞ்சம் பிகு பண்ணிகிட்டு அப்புறமா ஒத்துக்க...''

''இதை நீங்க சொல்லணுமா என்ன...?''

சொல்லிவிட்டு ரம்யா சிரித்த அதே விநாடி - கார் ஜி.என்.செட்டி ரோட்டில் மழை நீரை இறைத்துக் கொண்டு திரும்பியது.

சட்டென்று வேகம் குறைந்தது.

ரோட்டின் குறுக்கே -

ரெயின்கோட் அணிந்த அந்த உருவம் நின்றிருந்தது.

''க்றீச்ச்...''

காரை பிரேக்கிட்டு நிறுத்தினார் ஹாஸன்.

ரம்யமாலா கலவரமாய் கேட்டாள்.

''யார் ஸார் அது...?''

''தெரியலை...''

''போலீஸாய் இருக்குமோ...?''

ரெயின் கோட் அணிந்த அந்த உயரமான ஆசாமி - பெய்கிற மழையில் நிதானமாய் நடந்து வந்து ஹாஸனிடம் குனிந்தான். கேட்டான்.

''பின் சீட்ல உட்கார்ந்திட்டிருக்கிறது ரம்யமாலாதானே...?''

''இல்ல...''

சட்டென்று அவன் கோட் பாக்கெட்டிலிருந்து துப்பாக்கியை எடுத்து ஹாஸனின் நெற்றிப் பொட்டில் வைத்தான்.

''இப்ப சொல்லு....''

''அ...அ...அது...அது...''

''ரம்யமாலாதான்...''

''தேங்க்ஸ்....'' சொல்லி பற்களை வெள்ளையாய்க் காட்டி சிரித்த அந்த ரெயின்கோட் ஆசாமி - உடனே - சுட்டான். ''ஷ்ஷ்ஷ்க்...''

சைலன்ஸர் பொருத்தப்பட்ட ரிவால்வர். ஒரு சத்தமில்லாத தோட்டாவை - ஹாஸனின் மண்டைக்குள் செலுத்த -

கார்க்குள் சின்னதாய் ஒரு ரத்தப் பிரளயம்.



ஹாஸன் ரத்த மண்டையோடு - ஸ்டியரிங்கில் கவிழ்ந்து அந்தக் கணமே உயிரை விட -

வீறிட்டு கத்த முயன்ற ரம்யமாலாவின் பக்கமாய் - ரிவால்வர் திரும்பியது.

வாய் கப்பென்று மூடிக் கொண்டது.

ரெயின்கோட் ஆசாமி உறுமினார்.

''ம்... இறங்கு... கீழே....''

பதறியடித்துக் கொண்டு இறங்கினாள். அவள் இறங்கியதும் தோள்பட்டையை கப்பென்று பிடித்துக் கொண்டான்.

''ம்... நட.... சத்தம் போட்டே.... நாயைச் சுடற மாதிரி சுட்டு தெருவோரத்துல வீசிட்டு போயிடுவேன்...''

ஈரத்தில் சொத சொதத்த அந்த நிசப்தமான ரோட்டைக் கடந்து - மறுபக்கம் வந்தார்கள்.

கண்டசா கார் ஒன்று இருட்டில் நின்றிருந்தது.

''ப்ளக்...''

கதவைத் திறந்தான்.

''ஏறு...''

''நீ... நீ... யாரு... எ...எதுக்காக என்னை...?''

''ஏறடி... சொல்றேன்...''

ரம்யமாலாவின் கழுத்தைப் பிடித்து கார்க்குள் திணித்தான். அவள் பின்சீட்டில் நிலைகுலையய விழுந்தாள்.

யார் மீதோ மோதிக் கொண்ட மாதிரியான உணர்வு.

நிமிர்ந்தாள்.

பின்சீட்டின் இருட்டில் யாரோ சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள்.

உற்றுப் பார்த்தாள்.

இளைஞன்.

கடைவாயில் ஒரு ரத்தக்கோடு.

கண்கள் நிலைத்திருக்க - செத்திருந்தான்.

ரம்யமாலா வீறிட்டு மயக்கத்திற்கு போக ட்ரைவிங் சீட்டை ஆரோகணித்திருந்த அந்த ரெயின்கோட் ஆசாமி, காரை நகர்த்தினான்.

உச்சபட்ச வேகத்தில் பறத்தினான்.

தூறிக் கொண்டிருந்த மழை தீவிரமடைந்து - மூர்க்கமாய் பெய்ய ஆரம்பித்தது.

# 3



டி.எஸ்.பி. திவாகரன் ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்த பின்னும் மழை கொட்டிக் கொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் நான்கைந்து கான்ஸ்டபிள்களோட குடைகளுக்கு கீழே இயங்கிக் கொண்டிருந்தார்.

டி.எஸ்.பி.யைப் பார்த்ததும் சல்யூட் வைத்து தளர்ந்தார்.

''மிஸ்டர் ரமேஷ்குமார்...''

''ஸார்...''

''சுடப்பட்டு செத்துக்கிடக்கிற ஆள் யார்ன்னு தெரியுதா?''

''தெரியலை ஸார்...''

''போலீஸுக்கு மொதல்ல தகவல் குடுத்தது யாரு...?''

''இந்த டீக்கடை ஆள் ஸார்...'' கைலியும் பனியனும் அணிந்து குடையைப் பிடித்தபடி



நின்றிருந்த அந்த ஒடிசலான ஆளைக் காட்டினார் ரமேஷ்குமார். டி.எஸ்.பி.திவாகரன் தன் ஆட்காட்டி விரலை கொக்கியாக்கி கூப்பிட்டார்.

''இங்கே வாப்பா...''

அவன் போனான்.

''உம் பேரென்ன...?''

''கோபாலன் ஸார்...'' பேசிய தமிழில் லேசாய் மலையாள நெடி.

''உன் கடை எங்கே...?''

ரோட்டின் எதிர்புறத்தைக் காட்டினான்.

''என்ன நடந்தது... சொல்லு...?''

''மணி பதினொன்னே முக்கால் இருக்கும் ஸார்... நான் கடையை அடைச்சுட்டு தூங்கிட்டிருந்தேன். திடீர்ன்னு ஒரு கார் 'க்றீச்சி'ன்னு பிரேக் போட்டு நிக்கிற சத்தம் கேட்டது. நான் ஏதாவது ஆக்ஸிடெண்டோன்னு நினைச்சு - கடையோட ஒரு பலகையை மட்டும் நகர்த்தி வெளியே பார்த்தேன். போக் ரோட்டு வளைவுல ஒரு கார் நின்னுட்டிருந்தது. ட்ரைவர் சீட்டில் உட்கார்ந்திட்டிருக்கிற ஆளோடு - வெளியே நின்னுட்டிருந்த இன்னொரு ஆள் பேசிட்டிருந்தான். நான் பார்த்துட்டிருக்கும்போதே - ட்ரைவர் சீட்டில் இருந்த ஆள் துடிச்சு சரிந்தான். வெளியே நின்னுட்டிருந்த ஆள் பின்பக்கக் கதவைத் திறந்து பார்தா போட்டிருந்த ஒரு பொண்ணை இழுத்துக்கிட்டு வந்து - ரோட்டுக்கு இந்தப் பக்கமா நின்னுட்டிருந்த ஒரு கார்ல ஏத்திகிட்டு போயிட்டான். கார் போனதும் நான் கடையை விட்டு வெளியே வந்து - அந்தக் கார்க்கு வந்து பார்த்தேன். தலை பூரா ரத்தமா அந்த ஆள் செத்து கிடந்தார். உடனே போக் ரோட்டு டெலிபோன் பூத்துக்கு போய் அவசர போலீஸுக்கு தகவல் குடுத்தேன்...''

"பர்தா போட்ட பெண்ணை இழுத்துட்டு போன ஆள் எப்படி இருந்தான்...?"

"மழைக்கோட்டும் - தொப்பியும் போட்டுகிட்டு உயரமா இருந்தான். மூஞ்சி சரியானபடி தெரியலை..."

"அவன் - காரை எங்கே நிறுத்தியிருந்தான்...?"

"அதோ அங்கே...."

"என்ன கார் அது...?"

"பேரெல்லாம் எனக்குத் தெரியாது ஸார் நீளமா செகப்பு கலர்ல இருந்தது."

"கார் நெம்பரைப் பார்த்தியா...?"

"பார்க்க முயற்சி பண்ணினேன் ஸார்.... முதல் ரெண்டு நெம்பர் மட்டும் தெரிஞ்சது..."

"என்ன நெம்பர்...?"

"மூணு ரெண்டு..."

"வேற ஏதாவது அடையாளம்?"

"ப்ளோரஸன்ட் ஸ்டிக்கர் பட்டை பட்டையா நாலைஞ்சு நிறத்துல ஒட்டியிருந்தது ஸார்... கார் போயிட்டிருந்தப்ப - கார்ப்பரேஷன் லைட் வெளிச்சம் அந்த ஸ்டிக்கர் மேல பட்டு மின்னியதைப் பார்த்தேன்..."

"நீளமான காரா...?"

"ஆமா ஸார்..."

"அதே மாதிரியான ஒரு காரைக் காட்டினா அடையாளம் தெரியுமா உனக்கு...?"

"தெரியும் ஸார்...."

"ரமேஷ்குமார்..."

"ஸார்..."

"கோபாலன் சொன்னதையெல்லாம் நோட் பண்ணிட்டீங்களா...?"



"பண்ணிட்டேன் ஸார்..."

கோபாலனை விட்டு நகர்ந்த டி.எஸ்.பி. திவாகரன் டாட்ஸன் காருக்கு வந்து - உள்ளே ரத்தமாய் இருந்த ஹாசனை குனிந்துப் பார்த்தார்.

"ஃபாரன்ஸிக் வர்ற வரைக்கும் பாடியை டிஸ்டர்ப் பண்ணிடாதீங்க..."

"எஸ்...ஸார்..."

அடுத்த பத்து நிமிஷத்தில் ஒரு வெள்ளை அம்பாஸிடரில் ஃபாரன்ஸிக் ஆட்கள் நான்கு பேர் வந்து இறங்கினார்கள். குடைகள் விரிக்கப் பட்டன.

ஹாஸனின் உடலை வெளியே எடுத்து - அருகே இருந்த பஸ் ஸ்டாப் ஷெல்டர்க்கு கொண்டு போய் கிடத்தினார்கள். கோட் பாக்கெட்களில் கையை நுழைத்து தேடினார்கள்.

கோட்டின் உள் பாக்கெட்டில் பளபளப்பான ப்ராஸ் மெட்டல் வில்லையோடு - அந்த ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் சாவி கிடைத்தது. ஃபாரன்ஸிக் ஆட்களில் ஒருவர் கார்ப்பரேஷன் விளக்கு வெளிச்சத்தில் உயர்த்திப் பார்த்தார்.

ப்ராஸ் மெட்டலில் என்க்ரேவ் செய்யப் பட்டிருந்த எழுத்துக்கள் தெரிந்தன.

HOTEL SUMMER BREEZE,
Room No.509.

## 4



ஹோட்டல் 'சம்மர் ப்ரீஸ்' அசோக் நகரின் கோடியில் ஐந்து நட்சத்திர அந்தஸ்தோடும் பனிரெண்டும் மாடிகளோடும் உட்கார்ந்திருந்து. கட்டிடத்தின் உச்சியில் சிவப்பு விளக்கு ஒன்று அணைந்து அணைந்து எரிய - அதற்கு கீழே

நியான் போர்டு சம்மர் ப்ரீஸ் எழுத்துக்களைக் காட்டியது.

டி.எஸ்.பி. திவாகரன் ஜீப்பில் ஹோட்டலை அடைந்திருந்த போது - மழை சுத்தமாய் நின்று போய் - அந்த நள்ளிரவில் குளிர்ந்த காற்று மட்டும் சிலுசிலுவென்று வீசிக் கொண்டிருந்தது.

ஜீப்பை மார்பிள் போர்டிகோவில் நிறுத்தி விட்டு - டி.எஸ்.பி. திவாகரன் ரிசப்ஷன் ஹாலின் நுழைந்தார். பக்கவாட்டில் தெரிந்த 'பார்' உயிரோடு இருந்தது. 'ப' வடிவ சோபாக்களுக்கு மத்தியில் தெரிந்த டி.வி.பெட்டி வண்ண மயமாய் பெண்களைக் காட்டியது. ஒவ்வொரு தூணுக்குப் பக்கத்திலும் குரோட்டன்ஸ் செடிகள் நிறம் நிறமாய் இலைகளைக் காட்டின.

திவாகரைப் பார்த்ததும் - ரிசப்ஷன் கேபினுக்குள் டை அணிந்து உட்கார்ந்திருந்த இளைஞன் பவ்யமாய் எழுந்து நின்றான்.

''ஸார்...''

திவாகரன் வழவழப்பான கௌண்டரின் மேல் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு கேட்டார்.

''ரூம் நெம்பர் ஃபைவ் நாட் நைனில் யார் தங்கியிருக்காங்க?''

அவன் வெல்வெட் துணி வேய்ந்த லெட்ஜரைப் புரட்டினான். ஒரு பக்கத்தில் பார்வையை நிறுத்தி - ''மிஸ்டர் ஜே.ஹாஸன்.''

''ஃப்ரம்...?''

''துபாய்...''

''இப்ப ரூம்ல இருக்காரா...?''

''இல்லை. வெளியே போயிருக்கார்...''

''அவர் மட்டும் தனியா வந்திருக்காரா... இல்ல கூட யாராவது இருக்காங்களா...?''



''ஸார்... மிஸ்டர் ஹாஸன் துபாய் ஷேக் ஒருத்தர்க்கு பி.ஏ. ஷேக் இதே ஹோட்டல்ல 'ஸ்பெஷல ஸூட்ல' தங்கியிருக்கார்.''

''ஷேக் ஸூட்ல இருக்காரா...?''

''இருக்கார்...''

''அவரோட பேர் என்ன?''

''அஷ்ரத...''

''துபாயிலிருந்து எப்ப வந்தாங்க...?''

''ஒன்பது மணிக்கு.''

''ராத்திரி ஒன்பது மணிக்கு...?''

''ஆமா...''

''ஷேக்கைப் பார்க்கணும். ஸூட் நெம்பர் என்ன...?''

''எஸ் - ஃபைவ் ஸார்...''

டி.எஸ்.பி.திவாகரன் நகர்ந்தார். ரிசப்ஷனிஸ்ட் இளைஞன் குறுக்கிட்டான். ''ஸார்... எதுக்காக இந்த என்கொயரின்னு தெரிஞ்சுக்கலாமா...?''

''ஷேக்கைப் பார்த்துட்டு வந்து சொல்றேன்.''

திவாகரன் லிஃப்ட்டை பயன்படுத்தி - ஐந்தாவது தளத்தில் இருந்த ஸூட் நெம்பர் ஐந்துக்குப் போனார்.

வேலைப்பாடமைந்த பெரிய தேக்குக் கதவு - லேசாய் திறந்து கிடக்க - உள்ளே மெலிதான இளம் பச்சை ஜீரோவாட்ஸ் வெளிச்சம்.

காலிங்பெல் பட்டனைத் தேடி - அதன் மேல் தன் கட்டை விரலை வைத்து அழுத்தினார் திவாகரன்.

அது வீறிட்டு அடங்கியது.

காத்திருந்தார்.

அரை நிமிஷ நேரத்துக்கு உள்ளேயிருந்
எந்த சத்தமும் இல்லை. உள்ளே கனத்த மௌன

மறுபடியும் அழைப்பு மணி பொத்தானை அழுத்தினார். மறுபடியும் அதே மௌனம்.

திவாகரன் கதவின் மேல் கையை வைத்து மெல்ல தள்ளினார். அது பின் வாங்கியது.

எட்டிப் பார்த்தார்.

உள்ளே யாருமில்லை.

அறைக்குள் நுழைய முயன்ற விநாடி -

பின்புறம் அந்தக் குரல் கேட்டது.

''எக்ஸ்க்யூஸ்... மீ...''

திவாகரன் திரும்பினார்.

துபாய் யூனிஃபார்மில் ஷேக் நின்றிருந்தார். நல்ல ஆங்கிலம் பேசினார். ''என்ன வேண்டும் உங்களுக்கு...?''

''மிஸ்டர் அர்ஷத்...?''

''நான்தான்...''

''உங்களோடு சிறிது பேச வேண்டும்.''

''என்ன...?''

''மிஸ்டர் ஹாஸன் உங்கள் உதவியாளரா?''

''ஆமாம்...''

''C.D.1917 டாட்ஸன் கார் உங்களுடையது தானே...?''

''ஆமாம்...''

''ஹாஸனை காரில் என்ன காரியத்துக்காக எங்கே அனுப்பி வைத்தீர்கள் என்று சொல்ல முடியுமா...?''

''எதற்கு இந்த விசாரணை...?''

''சொல்லுங்கள். ஹாஸன் எங்கே...?''



''ஒரு தனிப்பட்ட காரியத்துக்காக போயிருக்கிறார்... அதை உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.''

''அவசியம் ஏற்பட்டிருக்கிறது மிஸ்டர் அர்ஷத்.''

''என்ன சொல்கிறீர்கள்...?''

''தியாகராயநகர் போக் ரோட்டின் வளைவில் ஒரு மணி நேரத்துக்கு முன்பு உங்களுடைய பி.ஏ. ஹாஸன் யாரோ ஒரு நபரால் கொலை செய்யப்பட்டிருக்கிறார்...''

''எ...என்ன...?''

அர்ஷத்தின் பழுப்பு நிற விழிகள் விரிந்தன.

''எஸ்... இப்போது சொல்லுங்கள். மழை பெய்கிற இந்த ராத்திரியில் எங்கே யாரைப் பார்க்கப் போனார்...?''

ஷேக் அதிர்ச்சியில் ஒன்றும் பேசத் தோன்றாமல் நிற்க - திவாகரன் தொடர்ந்தார்.

''நீங்கள் எதையும் மறைக்காமல் உண்மையைச் சொல்ல வேண்டிய நேரம் இது. ஹாஸன் கொலை செய்யப்படும் பொழுது - கார்க்குள் ஒரு பொண்ணும் இருந்ததாய் நேரில் பார்த்த ஒரு நபர் சாட்சி சொல்லியிருக்கிறார்.''

அர்ஷத் இன்னும் திடுக்கிட்டார்.

''காரில் இருந்த பெண்ணைக் கடத்திக் கொண்டு போய்விட்டார்களா...?''

''ஆமாம். அந்தப் பெண் பர்தா போட்டிருந்ததாய் தகவல்.''

''அ...அது...அது...?''

''சொல்லுங்கள் மிஸ்டர் அர்ஷத். டோண்ட் ஹைட் எனிதிங்க...''

''அது... அது ரம்யமாலா...''

திவாகரனின் நெற்றி சட்டென்று சுருங்கியது.

''ரம்யமாலா...?''

''ஆமாம்...''

''யூ...மீன்... சினி ஆக்ட்ரஸ்...?''

''எஸ்...''

''ரம்யமாலா எப்படி... உங்கள் காரில்...?''

''நான் இங்கே சென்னைக்கு வரும் போதெல்லாம் ராத்திரிகளை இங்குள்ள சினிமா நடிகைகளோடு பகிர்ந்து கொள்வது வாடிக்கை. ரம்யமாலா எனக்கு பிடித்தமானவள். அவளை அடிக்கடி அழைத்துக் கொள்வேன். என்னோட இரவைக் கழிப்பதற்காக வரும் நடிகைகள் தாங்கள் யார் என்பது வெளியே தெரிந்து விடக் கூடாது என்பதற்காக பர்தா போட்டுக் கொண்டு என் காரில் வருவார்கள். அதே காரில் விடிகிற போது வீட்டுக்குப் போய்விடுவார்கள். ஒரு நடிகையை காரில் ஏற்றிக் கொண்டு வருவதும் அவளை திரும்பவும் கொண்டு போய் வீட்டில் விடுவதும் என் பி.ஏ. ஹாஸனின் வேலை. இன்றைக்கு ரம்யமாலாவைக் கூட்டி வருவதற்காக ஹாஸன் காரை எடுத்துக் கொண்டு போனார். அவர் போய் வெகு நேரம் ஆகிவிட்டதால் - இருப்புக் கொள்ளாமல் அறையை விட்டு வெளியே வந்து சிட் - அவுட் ஜன்னலின் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''ஹாஸன் ஒரு பிம்ப் மாதிரி செயல் பட்டிருக்கிறார் என்று சொல்லலாமா...?''

''சொல்லலாம்...''

திவாகரன் அடுத்த கேள்விக்கு போகும் முன்

அவருடைய பார்வை -

எதேச்சையாய் கதவுப் பக்கம் போக - லேசாய் திறந்திருந்த கதவுக்குப் பின்னால் நிழலாடுவது தெரிந்தது.

யாரோ 'ஒட்டு' கேட்கிறார்கள்.



உஷாராகி எழுந்தார் திவாகரன். பூட்ஸ்களை கழற்றி ஓசைப்படாமல் வைத்துவிட்டு - கதவை நோக்கி சத்தமில்லாமல் -

அடிமேல் அடி வைத்து -

நடந்து சென்றார்.

## 5



முகத்தில் குளிர்ந்த நீர் அடிக்கப்பட்டதும் கண் விழித்தாள் ரம்யமாலா. அரை இருட்டில் ஒரு கட்டிலில் கிடத்தப்பட்டிருப்பது தெரிந்தது. தலைக்கு மேலே சுழலும் சீலிங் ஃபேன். கண்களை நன்றாக திறந்தபோது - பார்வைக்கு அந்த இளைஞனின் முகம் கிடைத்தது.

வேகமாய் எழ முயன்றாள்.

அசையக்கூட முடியவில்லை.

அவளுடைய கைகளும், கால்களும் கட்டிலோடு சேர்த்து கயிற்றால் பிணைக்கப் பட்டிருந்தது.

''வெல்கம் ரம்யமாலா... இந்த ஏழையின் குடிசைக்கு எழுந்தருளியிருக்கும் உனக்கு என்னுடைய நன்றி...''

ரம்யமாலா கண்களை விரித்துப் பார்த்தாள்.

அந்த இளைஞன் ஸ்டூலில் உட்கார்ந்திருந்தான். ஒடிசலான உடம்புவாகு. எலும்புதட்டிய முகம். நீள தலைமுடியை வழித்து சீவியிருந்தான். வலது தோளின் மேல் ஒரு கறுப்புப் பூனை - மஞ்சள் நிறக்கண்களோடு உட்கார்ந்திருந்தது. அதன் பார்வை ரம்யமாலாவையே வெறித்தது.

இளைஞன் சிரித்தான். ''என்ன ரம்யமாலா அப்படி பார்க்கிறே... இது மின்னி. நான் வெளியே போய்ட்டு வீட்டுக்குள்ளே வந்தா போதும் தோள்

மேல் ஏறிக்கும்... என் இணைபிரியா தோழ
என்னை யாராவது தாக்க முயற்சி பண்ணி
போதும், இதுக்கு கோபம் வந்து அவங்க உ
பூராவையும் பிறாண்டிடும்...''

ரம்யமாலா தன் வறண்ட உதடுக
ஈரப்படுத்திக் கொண்டு பயக்குரலில் கேட்டாள்

''எ...என்னை... எதுக்காக... இ....இங்கே...?''

''பயப்படாதே ரம்யமாலா.... உன் கிட்
இருக்கிற அரைகுறை கற்பை சூறையாடறது
காகவோ... உன்னை பணயமா வெச்சுகிட்டு
உங்கம்மா கிட்டே லட்சக்கணக்கா பண
கேட்கிறதுக்காகவோ உன்னை இங்கே கொண்டு
வரலை. அதே மாதிரி எனக்கு உன் மேல எந்த
பகையும் இல்லை. உன் வீட்டைச் சேர்ந்த யா
மேலயும் எனக்கு கோபம் கிடையாது....''

''....''

ரம்யமாலாவின் கண்கள் அவன் மேலேயே
அச்சமாய் நிலைத்திருந்தன. மார்புக்கூடு
வேகமாய் ஏறி தாழ்ந்தது.

அவன் தன் கோணல் பல் வரிசையைக் காட்டிச் சிரித்தான். ''பின்னே எதுக்காக உன்னைக் கொண்டு வந்திருக்கேன்னு கேட்கறியா...? அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ள நான் செய்யப் போகிற சில காரியங்கள் உனக்கு ஆச்சரிய மாயிருக்கும். அந்த ஆச்சரியம் தெளியறதுக் குள்ளே நீ செத்துப் போயிருப்பே...''

ரம்யமாலாவின் கண்களில் பீதி படர்ந்தது.

## 6



டி.எஸ்.பி. திவாகரன் சத்தம் காட்டாமல் நடந்து கதவை நோக்கி போய்க் கொண்டிருந்த போதே -



அழைப்பு மணி குரல் கொடுத்தது.

திவாகரன் கதவைத் திறந்தார்.

கழுத்தில் 'போ' அணிந்த அந்த இரட்டை நாடி சரீர மனிதர் நின்றிருந்தார்.

''ஸாரி ஸார்... த... டிஸ்டர்பன்ஸ்... மிஸ்டர் டி.எஸ்.பி.ஸார்...! நான் இந்த ஹோட்டலுக்கு மானேஜர். பேர் கிருஷ்ணமூர்த்தி. நீங்க ஏதோ என்கொய்ரிக்கு வந்திருக்கிறதாய் ஹோட்டல் ரிசப்ஷனிஸ்ட் எனக்கு போன் பண்ணி சொன்னார்.''

''எஸ்...''

''என்கொய்ரி எதுக்காகன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

''ஷ்யூர்... உள்ளே வாங்க...''

மானேஜர் உள்ளே வந்தார்.

திவாகரன் ஹாஸன் கொலையுண்ட விபரத்தை சொல்ல - மானேஜரின் முகம் லேசாக கரியாயிற்று.

''ஹாஸன் நைஸ் மென். வெரி லாயல் ஓ ஹிஸ்மாஸ்டர். ராத்திரி பத்தரை மணி சுமார்க்கு அவரை ரிசப்ஷன்ல பார்த்தேன். மழையில எங்கே கிளம்பறீங்கன்னு கேட்டேன்....அவர் கண்ணைச் சிமிட்டி சிரித்து விட்டு போனார்.''

''ஹாஸன் உங்ககிட்ட எதாவது பேசினாரா?''

''இல்லை.''

பக்கத்து டீபாயின் மேல் இருந்த தொலைபேசி கூப்பிட்டது. திவாகரன் ரிஸீவரை எடுத்தார்.

''எஸ்...''

''ஸார்... நான் ரமேஷ்குமார்...''

''என்ன ரம்யமாலா வீட்டுக்கு போன களா...?''

''போனேன் ஸார்... ஹாஸன் ர மாலாவைத் தான் கார்ல கூட்டிகிட்டு போயி கார்... ஹாஸன் கொலையான விஷயத்தை ரம்யமாலா கடத்தப்பட்ட விஷயத்தை ரம்யமாலாவோட அம்மா பரிமளத்துகிட் சொன்னதும் அவங்க 'பெய்ண்ட்' ஆயிட்டாங்க மயக்கம் இன்னும் தெளியலை. டாக்டர்க்கு ஆ அனுப்பியிருக்கோம்...''

''இப்ப எங்கிருந்து பேசிக்கிட்டிருக்கீங்க...?''

''ரம்யமாலா வீட்டுக்கு எதிரே இருக்கி டெலிபோன் பூத்திலிருந்து...''

''அந்த வீட்ல வேற யார் இருக்காங்க?''

''கூர்க்கா...! அவனை விசாரிச்சப்ப ஒ விஷயத்தை சொன்னான் ஸார்...''

''என்ன...?''

''ரம்யமாலா வீட்டு டெலிபோன் டிஸ் ஆர்டராயிருக்கிறதுனால பரிமளம் பதினொரு மணி சுமார்க்கு - அதாவது ஹாஸன் வீட்டுக் குள்ளே இருக்கும்போது - வெளியே வந்து பூத்திலிருந்து யாருக்கோ போன் பண்ணி பேசியிருக்காங்க...''

''யார்க்கு...?''

''கூர்க்காவுக்கு அந்த விபரம் தெரியலை... பரிமளம் மயக்கம் தெளிஞ்சு எழுந்த பின்னாடிதான் கேட்கணும்...''

''சரி... கூர்க்கா என்ன சொன்னான்...?''

''பரிமளம் போன் பண்ணிட்டு வேகவேகமாக வீட்டுக்கு வந்து கேட்ல நின்னுட்டு இருந்த கூர்க்காகிட்டே 'ராம்லால்! எதிர் டெலிபோன் பூத்துக்குப் பக்கத்துல மழைக்கோட்டு போட்டுக்



கிட்டு ஒருத்தன் நின்னுட்டிருக்கான். ஆளைப் பார்த்தா சந்தேகமாயிருக்கு. கொஞ்சம் கவனின்னு சொல்லியிருக்காங்க... கூர்க்கா பார்த்திருக்கான். ஆள் யாருமில்லை. தெருமுனை வரைக்கும் போய் பார்த்துட்டு வரட்டுமா என்னு கேட்டிருக்கான். அதுக்கு பரிமளம் 'வேண்டாம்... நீ இங்கேயே இரு... கேட்டை விட்டு அந்தப் பக்கம் இந்தப்பக்கம் போயிடாதேன்னு சொல்லியிருக்காங்க...''

''நீங்க சொல்றதைப் பார்த்தா... கொலையாளி ஹாஸனை ஆரம்பத்திலிருந்தே ஃபாலோ பண்ணியிருக்கணும்னு தெரியுது...''

''மே...பி... ஸார்...''

''பரிமளத்துக்கு சாதாரண மயக்கம்தானே...?''

''ஆமா... ஸார்...''

''அவங்களுக்கு மயக்கம் தெளிஞ்சதும் என்கொய்ரியை ஆரம்பிச்சு தகவல்களை திரட்டிகிட்டு மறுபடியும் எனக்கு போன் பண்ணுங்க....''

''எஸ்... ஸார்...''

திவாகரன் ரிஸீவரை வைத்துவிட்டு - ஹோட்டல் மானேஜர் கிருஷ்ணமூர்த்தியிடம் நிமிர்ந்தார்.

''கொலையாளி ஹாஸனோட காரை ஆரம்பத்திலிருந்தே பின் தொடர்ந்து போயிருக்கிற மாதிரி தெரியுது. அவர் ஹோட்டலிலிருந்து புறப்படும்போதே கூட ஃபாலோ பண்ணி போயிருக்கலாம்... உங்க ஹோட்டல் கேட்ல இருக்கிற வாட்ச்மேனுக்கு வெய்க்கிள் ரெஜிஸ்டரை மெய்ன்டைன் பண்ற வழக்கம் உண்டா?''

''உண்டு ஸார்....''

''அந்த ரெஜிஸ்டரைக் கொண்டு வ
சொல்லுங்க....''

மானேஜர் அங்கிருந்த இண்டர்காம் மூலம
- ரிசப்ஷனை தொடர்பு கொண்டு பேச - அடுத்
பத்தாவது நிமிஷம்.

இன் கம்மிங் அண்ட் அவுட் கோயி
வெகிக்கிள்ஸ் ரெஜிஸ்டரோடு மூஞ்சி நிறை
மீசை வைத்துக் கொண்டு - அந்த வாட்ச்மே
பதட்டமாய் வந்து நின்றான்.

திவாகரன் லெட்ஜரை வாங்கிப் பார்த்தார்.

பத்தரை மணியிலிருந்து வெளியே போன
கார்களைப் பார்த்தார்.

10.35-க்கு நேராய் - CD.1917 என்று ஹாஸன்
சென்ற கார் நெம்பர் எழுதப்பட்டிருக்க - அதே
10.35-க்கு அடுத்த வரியில் T.M.E.3245 என்று
எழுதப்பட்டிருந்தது.

திவாகரன் கையைச் சொடுக்கினார்.

''காட்... இட்...''

ஷேக் கேட்டார்..

''வாட் டிட்... யூ... கெட்... ஸார்...?''

''கொலையாளியின் காரை நேரில் பார்த்த டீக்கடை ஆள் ஒருவன் காரின் முதல் இரண்டு எண்களான 3-ஐயும், 2-ஐயும், பார்த்திருந்தான். இப்போது கொலையாளியின் கார் ரெஜிஸ்ட்ரேஷன் எண்கள் முழுமையாக கிடைத்துவிட்டது. ஹாஸனின் கார் ஹோட்டலை விட்டு புறப்பட்டதுமே - கொலையாளியும் உடனே தன் காரில் அவரைத் தொடர்ந்திருக்கிறான்...''

திவாகரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே - டெலிபோன் மணி அடித்தது. ரிஸீவரை எடுத்தார். செவிமடுத்துவிட்டு மானேஜர் கிருஷ்ண மூர்த்தியிடம் நீட்டினார்.



''ரிசப்ஷனிலிருந்து பேசுகிறார்கள்... போன் உங்களுக்கு.''

கிருஷ்ணமூர்த்தி ரிஸீவரை வாங்கி ''என்ன?'' என்றார்.

''ஸார்... உங்க கூட பத்மநாபன்னு ஒருத்தர் பேசணுமாம்.''

''லைனைக் குடு...''

லைன் கொடுக்கப்பட்டது.

''ஹலோ...''

''மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி...''

''ஹோல்டிங்....''

''நான் பத்மநாபன் பேசறேன்...?''

''எந்த பத்மநாபன்...?''

''மறந்துட்டீங்க...! ஆறு மாசத்துக்கு முந்தி சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் மீட் பண்ணியிருக்கோம். நான் கிரிக்கெட் ப்ளேயர் விக்ரமோட அண்ணன்.''

''ஓ... விக்ரமோட அண்ணன்...? இப்ப ஞாபகம் வருது. என்ன விஷயம் ஸார்...''

''ஒரு சின்ன உதவி...''

''சொல்லுங்க...''

''உங்க ஹோட்டல்ல நடக்கிற டின்னரில் கலந்துக்கிறதுக்காக என் தம்பி விக்ரம் பத்து மணி சுமார்க்கு அங்கே புறப்பட்டு வந்தான். இப்ப மணி மிட் நைட் ஒண்ணாகப் போகுது. ஆள் இன்னும் வீட்டுக்கு வரலை. விக்ரம் லிக்கர் சாப்பிடுகிற பேர்வழி. அதிகமா குடிச்சுட்டு - கம்யூனிடி ஹாலில் விழுந்து கிடக்கலாம்... நீங்க... நிலைமையைப் பார்த்து எனக்கு போன் பண்ணினா நான் உடனே புறப்பட்டு வர்றேன்...''

''விக்ரம் பார்ட்டிக்கு வந்திருந்தாரா?''

''ஆமா...''

''நான் பார்க்கவே இல்லையே...?''

''ஹோட்டல் கார் பார்க்கிங்கில் விக்ரமோட கார் இருக்கான்னு பாருங்க. கார் இருந்தா அவன் பார்ட்டியில இருக்கான்னு அர்த்தம்...''

''கார் நெம்பர்...?''

''TME.3245...''

## 7



ரம்யமாலா பீதி படர்ந்த கண்களோடு பார்த்துக் கொண்டிருக்கும்போதே - அவன் புன்னகையோடு அந்த காரியங்களை செய்ய ஆரம்பித்தான்.

ஆறடி நீளமும், இரண்டடி அகலமும், இரண்டடி ஆழமும் இருந்த ஒரு கண்ணாடி தொட்டியை - அதன் அடியில் பொருத்தப்பட்டிருந்த வீலர்களின் உதவியால் தள்ளிக் கொண்டு வந்தான். ரம்யமாலாவுக்கு பக்கத்தில் கொண்டு வந்து நிறுத்திவிட்டு - தன் இடது கையில் வைத்திருந்த ஒரு கர்ச்சீப்பால் ரம்யமாலாவின் நாசியை மெல்ல பொத்தி எடுத்தான்.

மூளைக்குள் ஏதோ பூ வாசனை அடிக்க தலை கிறுகிறுத்து போயிற்று. கண்கள் சொருகிக் கொள்ள - உடம்புக்கு காற்றில் மிதக்கிற மாதிரியான உணர்வு.

அவன் ரம்யமாலாவின் கை - கால்களைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தான். அவளை இரண்டு கைகளாலும் தூக்கி - அந்தக் கண்ணாடித் தொட்டியில் கிடத்தினான். சரியாய்



படுக்க வைத்து - கைகளையும் கால்களையும் நீட்டி வைத்தான். மோவாயைத் தொட்டு முகத்தை நிமிர்த்தினான்.

பத்தடி தள்ளி நின்று - ரம்யமாலா படுத்திருந்த அழகைப் பார்த்துவிட்டு ''ஓ... கே... பேபி...'' என்று சொல்லி சிரித்தான். பின் பக்கத்து அறைக்கு போய் இரண்டு பால்பூர்தின டின்களை தூக்கிக் கொண்டு வந்தான்.

ஒன்றின் மூடியைத் திறந்தான்.

நிறமற்ற கண்ணாடி மாதிரியான திரவம்.

ஒரு பெரிய புனலை எடுத்து - அதை ரம்யமாலாவின் வாயில் சொருகி - அந்த திரவத்தை ஊற்றினான்.

''க்ளக்...ப்ளக்...''

பாதி சுயநினைவோடு இருந்த ரம்யமாலா - மூச்சுத் திணறலோடு அந்த திரவத்தை குடிக்க ஆரம்பித்தாள்.

வயிறு திரவத்தால் நிரம்பியதும் - புனலை எடுத்து விட்டு மீதம் இருந்த திரவத்தை கண்ணாடித் தொட்டியில் ஊற்ற - ரம்யமாலாவின் உடம்பு மேலே கொஞ்சமாய் எழும்பி மிதந்தது.

கண்ணாடித் தொட்டியின் மேல் விளிம்பு வரை திரவம் வந்ததும் ஊற்றுவதை நிறுத்திவிட்டு - தொட்டியின் மேல்வாயை கண்ணாடி பலகையால் கச்சிதமாய் மூடி - அதன் நான்கு மூலைகளிலும் பசை டேப்பை ஒட்டினான்.

''தாங்க்யூ... பேபி...''

முதுகு குலுங்க சிரித்தான். கொஞ்சம் தள்ளிப் போய் நின்று கொண்டு - திரவத்தில் மிதக்கும் ரம்யமாலாவை - கண்களில் ஒரு குரூரம் பரவ பார்த்தான்.

## 8



டி.எஸ்.பி. திவாகரன் மானேஜர் கிருஷ்ண மூர்த்தி சொன்னதைச் கேட்டு சின்னதாய் திடுக்கிட்டார்.

''என்னது...TME 3245 கார் நெம்பர் கிரிக்கெட் ப்ளேயர் விக்ரமோடதா...?''

''ஆமா... ஸார்...''

''அப்படின்னா... ஹாஸன் போன காரை ஃபாலோ பண்ணிட்டு போனது கிரிக்கெட் ப்ளேயர் விக்ரமா...?''

''எஸ்...''

''அவர் எதுக்காக ஹாஸனை மர்டர் பண்ணி நடிகை ரம்யமாலாவை கடத்திட்டு போகலாம்.. உங்க கூட போன்ல பேசினது யாரு...?''

''விக்ரமோட ப்ரதர் பத்மநாபன்.''

''அவர் இன்னும் லைன்லதான் இருக்காரா...?''

''ஆமா...'' கிருஷ்ணமூர்த்தி சொல்லி தன் கையில் வைத்திருந்த ரிஸீவரை நீட்டினார். திவாகரன் வாங்கி பேசினார்.

''ஹலோ... மிஸ்டர் பத்மநாபன்...நான் டி.எஸ்.பி.பேசறேன்... கிரிக்கெட் ப்ளேயர் விக்ரம் உங்க கூடப் பிறந்த தம்பியா...?''

''ஆமா...''

''அவர் எந்த கார்ல வந்தார்...?''

''காண்டஸா...''

''கலர்...?''

''ரெட்...! எதுக்காக ஸார் இதையெல்லாம் கேக்கறீங்க...?''



''மிஸ்டர் பத்மநாபன்...! நீங்க உடனே புறப்பட்டு ஹோட்டலுக்கு வாங்க...''

பத்மநாபன் லேசாய் பதட்டப்பட்டார்.

''ஸார்...! என்ன விஷயம் ஸார்...! தம்பி அதிகமா குடிச்சிட்டு ஏதாவது கலாட்டா பண்ணிட்டானா...?''

''ப்ளீஸ்... உடனே புறப்பட்டு வாங்க! நேர்ல பேசிக்கலாம். சூட் நெம்பர் S.5-க்கு வாங்க...'' திவாகரன் ரிஸீவரை வைத்துவிட்டு அந்த பத்மநாபனுக்காக காத்திருக்க ஆரம்பித்தார்.

## 9



கண்ணாடித் தொட்டி திரவத்தில் மிதந்து கொண்டிருந்த ரம்யமாலாவை ஒரு குரூரப் பார்வையோடு பார்த்துக் கொண்டிருந்த அவன் - பக்கத்து அறைக்குப் போய் - வாயில் ரத்தக்கோடோடு சடலமாய்க் கிடந்த அந்த இளைஞனைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

சோபாவில் கிடத்தினான். ஒரு துணியை தண்ணீரில் நனைத்து ரத்தக்கறைகளை துடைத்தவன் -

வாசலில் காலிங்பெல் அலறும் சத்தம் கேட்டு லேசாய் நெற்றியைச் சுருக்கிக் கொண்டான்.

'இந்நேரத்துக்கு யாா...?'

எழுந்தான்.

போர்டிகோவின் மங்கிய வெளிச்சத்தில் -

போலீஸ் யூனிஃபார்ம்கள் தெரிந்தன.

அவனுடைய - இருதயத்துக்குள் ஒரு பய முடிச்சு விழுந்தது.

மறுபடியும் காலிங்பெல் அடித்தது.

ரிவால்வரின் மேல் வலது கையை வைத்து கொண்டு கதவை லாக் விடுவித்து மெல்ல திறந்தான்.

## 10



பத்மநாபன் அரை மணி நேரத்துக்குள் வந்து சேர்ந்துவிட்டார். அறைக்குள் இருந்த ஷேக் மானேஜர் கிருஷ்ணமூர்த்தி, டி.எஸ்.பி. திவாகரன் மூன்று பேரைப் பார்த்ததும் முகம் வெளிறிப் போனார்.

''ஸார்... என் தம்பி விக்ரம் ஏதாவது ப்ராப்ளத்தை க்ரியேட் பண்ணி விட்டானா...?''

''மி...ரிலாக்ஸ் பத்மநாபன்... உங்க ப்ரதர் விக்ரம் இப்போ ஹோட்டலில் இல்லை.

பத்மநாபனின் கண்கள் சுருங்கியது.

''உங்களுக்கு இதே சென்னைல வேற எங்கேயாவது வீடு இருக்கா...?''

''இல்ல... ஸார்...''

''சினிமா நடிகை ரம்யமாலாவுக்கும் உங்க ப்ரதர் விக்ரமுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா...?''

''இல்லை...''

''நிச்சயமா உங்களுக்குத் தெரியுமா...?''

''தெரியும்...''

''ஹாஸன்'ங்கிற பேரை உங்க ப்ரதர் விக்ரம் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறீர்கள்...?''

''இல்லை...''

டெலிபோன் கூப்பிட்டது.



திவாகரன் ரிஸீவரை எடுத்தார்.

''எஸ்...''

''ஸார்...! நான் இன்ஸ்பெக்டர் ரமேஷ் குமார்...''

''சொல்லுங்க...''

''போலீஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து ஒரு தகவல் ஸார்.''

''என்ன...?''

''TME 3245 எண்ணுள்ள காண்டஸா கார் வேளச்சேரி ரோட்ல - புற்றுக் கோயிலுக்கு பக்கத்தில் இருக்கிற ஒரு ஆலமரத்துக்கு கீழே நின்னுட்டிருக்கிறதாய் தகவல். காரில் யாருமில்லை.''

''தகவல் வந்து எவ்வளவு நேரமாச்சு...?''

''பத்து நிமிஷமாச்சு... ஸார்...''

''சரி... நீங்களும் ரெண்டு கான்ஸ்டபிள்ஸும் ஜீப்ல ஸ்பாட்டுக்கு போயிடுங்க... அரை மணி நேரத்துக்குள்ள நானும் வந்து சேர்ந்துடறேன்.''

''எஸ்... ஸார்...''

டி.எஸ்.பி. திவாகரன் ரிஸீவரை வைத்து விட்டு பத்மநாபனிடம் திரும்பினார்.

''வேளச்சேரி வரைக்கும் போய்ட்டு வந்துடலாம் வாங்க.''

## 11



கதவைத் திறந்தான் அவன்.

வெளியே இரண்டு கான்ஸ்டபிள்கள். கைகளில் டார்ச்சும் லாட்டியும் தெரிந்தன. இருதயம் 'திடுக்திடுக்' என்று அடித்துக்

கொண்டாலும் கலக்கத்தை வெளியே காட் கொள்ளாமல் கேட்டான்.

''எஸ்... எ...என்ன... வேணும்...''

ஒரு கான்ஸ்டபிள் பவ்யமான குரலி பேசினான். ''ஸாரி ஸார். உங்க தூக்கத்த கெடுத்துட்டோம். இந்த ஏரியாவில் கொஞ் நாளாவே திருட்டுத்தனம் அதிகமாயிட்டதா புகார். அதனால ரோந்துக்கு எங்களை போட்டிருக்காங்க... அப்படி ரோந்து வர்றப்ப உங் பங்களா காம்பௌண்ட் கேட்டை பார்த்தோ உள்பக்கமா பூட்டப்படாமே தொறந்து கிடந்த அதான் சொல்லிட்டு போலாம்னு காலிங்பெ கொடுத்தோம்... கேட்டை உள்பக்கம பூட்டிக்குங்க ஸார்...''

''தாங்க்ஸ்....'' அவன் புன்னகைத்தான்.

''இவ்வளவு பெரிய பங்களாவுக் வாட்ச்மேன் கிடையாதா ஸார்?''

''வாட்ச்மேன் இல்லை...''

''எக்ஸ்-சர்வீஸ்மேன் ஆள் யாராவது கிடைச்சா போட்டுக்குங்க ஸார்...''

''சரி...''

''நாங்க வர்றோம் ஸார்... தூக்கத்துல உங்களை எழுப்பிவிட்டதுக்காக மன்னிச்சக்குங் ஸார்...''

''நோ... ப்ராப்ளம்... நான் கேட்டைப் பூட்டிக்கிறேன்.''

அவன் சொல்ல - கான்ஸ்டபிள்கள் நகர்ந்தார்கள். போர்டிகோவில் இறங்கியவர்கள் பேசிக் கொண்டே கேட்டை நோக்கி நடந்தார்கள். குறைந்த ஸ்தாயி.

''பழைய காலத்து பங்களா... எப்படியிருக்கு பார்த்தியா?''



''நல்லாத்தான் இருக்கு... ஆனா....''

''ஆனா... என்ன...?''

''இந்த இருட்டுல இந்த பங்களாவைப் பார்க்கிறப்போ...?''

''பார்க்கிறப்போ...?''

''மனசுக்குள்ளே ஒரு பயம் வருது... சில வீடுகளைப் பார்த்தாலே மனசுக்கு சந்தோஷமா இருக்கும்... ஆனா இந்த பங்களா அமானுஷ்யமா ஏதோ சூன்யம் புடிச்ச மாதிரி இருக்கு...''

அவர்கள் மெதுவாகப் பேசிக் கொண்டு போனாலும் - துல்லியமாய் அவன் காதுகளில் விழ - ரத்தத்தில் அமிலம் கலந்த மாதிரியான உணர்வில் அவனுடைய காது நுனிகள் சூடாகிப் போயிற்று.

ஒரு கோபப் பார்வையோடு அந்த கான்ஸ்டபிள்களின் முதுகுகளையே வெறித்துப் பார்த்தான்.

மூளைப் பகுதிக்குள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் ஒரு சேர பறந்தன.

## 12



வேளச்சேரி போகும் ரோட்டில் - புற்றுக் கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு பெரிய ஆலமரத்துக்குக் கீழே - அந்த காண்டஸா கார் நின்றிருக்க - டி.எஸ்.பி. திவாகரன் கேட்டார்.

''பத்மநாபன்...! இது உங்க கார்தானே...?''

''ஆமா ஸார்....''

''காரை இங்கே நிறுத்திட்டு உங்க ப்ரதர் விக்ரம் ரம்யமாலாவோடு எங்கே போயிருப்பார்னு தெரியலையே...?'' திவாகரன் சொல்ல பத்மநாபன் குறுக்கிட்டான்.

''ஸார்... என் தம்பி விக்ரம் ஒரு பொண்ணை
கடத்தற அளவுக்கு மோசமானவன் இல்லை.
அளவுக்கு மீறி குடிக்கிறது ஒண்ணுதான் அவ
கிட்ட இருந்த கெட்ட பழக்கம்...''

திவாகரன் புன்னகைத்தார். ''பத்மநாப
ஒருத்தர்க்கு குடிப்பழக்கம் இருந்தா போதும்.
அத்தனை கெட்ட பழக்கங்களும் தானா வந்
ஒட்டிக்கும். உங்க ப்ரதர் விக்ரம் ஒரு புகழ்பெற
கிரிக்கெட் விளையாட்டு வீரர். சினிமா நடிகை
களுக்கும் கிரிக்கெட் வீரர்களுக்கும் மத்தியி
என்னிக்குமே ஒருவிதமான தொடர்பு உண்டு.''

''ஸார்...வந்து...''

''நான் சொல்றதை முழுசா கேட்டுட்
அப்புறமா பதில் சொல்லுங்க...! என்னோ
கணிப்பு இதுதான்... ரம்யமாலாவும் விக்ரமு
ஒருத்தரையொருத்தர் - விரும்பிட்டிரு
திருக்காங்க. நடிகைங்ககிட்ட எப்பவு
உண்மையான காதல் இருக்காது. அவங்
எண்ணம் பூராவுமே பணம் சம்பாதிக்கிறதுலதா
இருக்கும். துபாயிலிருந்து ஷேக் வரு
போதெல்லாம் ரம்யமாலா அவருடை
படுக்கைக்கு போறது விக்ரமுக்கு தெரி
சிருக்கலாம்... அந்த ஆத்திரத்தை மனசு
வெச்சுகிட்டு - பார்ட்டிக்கு வந்த விக்ரம் ஹாஸ
கார்ல போறதை பார்த்திருக்கார். விக்ரம் உட
பார்ட்டியை விட்டு கிளம்பி - ஹாஸனோட கார
ஃபாலோ பண்ணி போயிருக்கார். ஹாஸ
ரம்யமாலா வீட்டுக்குப் போய் - அவளைக் கார்
ஏத்திகிட்டு வரும்போது - விக்ரம் அந்த காரை வழி
மறிச்சு ஹாஸனை சுட்டுக் கொன்னுட்டு -
ரம்யமாலாவை தன்னோட கார்ல கொண்டு
போயிட்டார்.''

''நீங்க சொல்றது மாதிரி இருந்தா கார் இங்கே
அநாதையா நின்னுட்டிருக்க வேண்டிய
அவசியம் இல்லை ஸார்...''



''காரை நிறுத்திட்டு ரம்யமாலாவை பக்கத்தில் இருக்கிற ஏதாவது ஒரு பங்களாவுக்கு கொண்டு போயிருக்கலாம்...''

இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் குறுக்கிட்டார்.

''ஸார்! காரோட பின்சீட்லேயும், கால் வைக்கிற இடத்திலேயும் நிறைய ரத்தம் தெரியுது...''

''விக்ரம் ஆத்திரத்துல ரம்யமாலாவை சுட்டுக் கொலை பண்ணியிருக்கலாம். அந்த ரத்தம்தான் இது... பாடியை டிஸ்போஸ் பண்றதுக்காக விக்ரம் இந்த ஏரியாவுக்கு பாடியைக் கொண்டு வந்திருக்கலாம்...''

காரை சோதனையிட்டுக் கொண்டிருந்த - கான்ஸ்டபிள்களில் ஒருவர் திவாகரனை நெருங்கி, ''ஸார்'' என்றார்.

''என்ன...?''

''டிரைவிங் சீட்டுக்கு கீழே இந்த பத்து ரூபாய் நோட்டும் ஒரு ரசீதும் கிடைத்தது ஸார்...''

வாங்கினார்.

டார்ச்சை அடித்து - ரசீதைப் பார்த்தார்.

ரசீதின் நெற்றியில் அந்த அட்ரஸ் மிகச் சிறிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்தது.

**அபு ஆர்ட் காலரி,**
**109, ஐந்தாவது தளம், ஏ விங்க்,**
**பார்ஸன் மேன்யர்,**
**ஜெமினி டவர், அண்ணா சாலை,**
**சென்னை - 6.**

அட்ரஸுக்கு கீழே மெட்டீரியல் என்று போட்ட கூட்டத்துக்குள் பால் பாயிண்ட் பேனாவால் கிறுக்கப்பட்ட மூன்று தமிழ் எழுத்துக்கள் தெரிந்தன.

திவாகரன் டார்ச்சை பக்கத்தில் கொண
போய் பார்த்தார்.

தி.பா.ஓ.

## 13



மறுநாள் காலை பத்துமணி.

டி.எஸ்.பி. திவாகரனும் இன்ஸ்பெக்ட ரமேஷ்குமாரும் - ஜெமினி டவரின் ஐந்தாவ தளத்தை நோக்கி - லிஃப்ட்டில் உயர்ந் கொண்டிருந்தார்கள். டி.எஸ்.பி.பேசியபடி வந்தா ''பத்மநாபனைப் பத்தி நீங்க என் நினைக்கறீங்க ரமேஷ்குமார்? ஹி ஈஸ் ஹைடி சம்திங்... அவங்க கார்க்குள்ளே கிடந்த ஆர்ட் கால ரசீதைக் காட்டி 'என்ன வாங்கினீங்கன்' கேட்டா... தெரியாதுன்னு சொல்றார்... ரம்யமா கடத்தப்பட்டதில் ரெண்டு பேர்க்கும் சம்பந்த இருக்குன்னு நினைக்கிறேன். வாட் டு யூ திங்க்...?''

''ஸார்... கொஞ்ச நேரத்துக்கு முந்தி எனக் தோணின அஸ்ஸெம்ஷன் என்னான்னா...?''

''ம்... சொல்லுங்க...''

''ஒரு பாப்புலரான கிரிக்கெட் ப்ளேயர் விக் ஒரு கொலையைப் பண்ணி - ஒரு நடிகை கடத்தற அளவுக்கு போகமாட்டார்....''

''அப்படீன்னா...?''

''இந்த சம்பவங்கள்ல மூணாவதா ஒரு ஆ சம்பந்தப்பட்டிருக்கலாம்னு என் மனசுக் படுது...''

''அந்த கோணத்தையும் பார்த்துடுவோம்...''

ஐந்தாவது தளம் வந்தது.



லிப்டிலிருந்து வெளிப்பட்டு - மார்பிள் வராந்தாவில் நடந்து எதிர்பட்ட அபு ஆர்ட் காலரிக்குள் நுழைந்தார்கள்.

யூனிஃபார்ம்களைப் பார்த்து தன் பெரிய, பெரிய கண்களில் மிரண்ட அவன் தயக்கமாய் எழுந்து நின்று ''எஸ்'' என்றான்.

''ஆர்ட் காலரிக்கு இன்சார்ஜ் யார்?''

''மிஸ்டர் அபு...''

''வேர் ஈஸ் ஹி....?''

ஹாலின் கோடியில் தெரிந்த ஒரு லாமினேட்டட் கதவைக் காட்டி ''ஹி ஈஸ் தேர்'' என்றான்.

போனார்கள்.

சாத்தப்பட்ட கதவைத் தட்டியதும் ''எஸ்... கம்மின்'' என்ற குரல் வந்தது. கதவைத் தள்ளிக் கொண்டு நுழைந்தார்கள்.

திவாகரன் கேட்டார்.

''மிஸ்டர் அபு...?''

''நான்தான்...'' தமிழ் பேசினான்.

''உங்ககிட்ட ஒரு சின்ன விசாரணை...''

''உட்காருங்க... ப்ளீஸ்...''

அவர்கள் உட்கார்ந்ததும் கேட்டான்.

''விசாரணை எது சம்பந்தமா...?''

''இது உங்க ஆர்ட் காலரி ரசீதுதானே...?'' திவாகரன் தன் பாக்கெட்டில் வைத்திருந்த அந்த ரசீதை எடுத்துக் காட்டினார்.

அவன் வாங்கிப் பார்த்துவிட்டு தலையாட்டி னான்.

''ஆமா... இது எங்க ரசீதுதான்...''

''ரசீதில் 'தி.பா.ஓ.'ன்னு எழுதியிருக்கே...! இதுக்கு என்ன அர்த்தம்...?''

அடி ரசீதில் இருந்த அந்த எழுத்துக்களை பார்த்துவிட்டு இடதுகை விரல்களால் காது மடலை நிரடிக் கொண்டே யோசித்தான். பின் மேஜை மேல் இருந்த இண்டர்காம் ரிஸீவரை எடுத்து, 'கமலியா...! ஒரு நிமிஷம் என்னோட ரூம் வரைக்கும் வந்துட்டு போ...'' என்று சொல்லி ரிஸிவரை வைத்துவிட்டு மறுபடியும் ரசீதைப் பார்த்து திவாகரனை ஏறிட்டான்.

''ஸார்... இது பேக்கிங் செக்‌ஷன்ல போட்ட மெட்டீரியல் ரசீது.

கதவு தட்டப்பட்டது.

''எஸ்...''

அந்தக் கமலி உள்ளே வந்தாள். அபு அவளை ஏறிட்டான்.

''கமலி! இந்த ரசீது நீ போட்டதுதானே...?''

வாங்கிப் பார்த்துவிட்டு தலையாட்டினாள்.

''ஆமா... ஸார்...''

''ஷார்ட் ஃபார்ம்ல தி.பா.ஓ.ன்னு எழுதியிருக்கியே...? அது என்ன போர்ட்ராய்ட்...?''

''திரும்பிப் பார்த்த ஓவியம் ஸார்...''

அபு புன்னகைத்தான்.

''அந்த ட்ரிக் ஆர்ட்டா...?''

''அதான் ஸார்...''

அபு திவாகரனிடம் திரும்பினான். ''ஸார்... நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி இது ஒரு ஓவியத்தோட ஷார்ட் ஃபார்ம் நேம்... அந்த ட்ரிக் ஆர்ட் ஓவியத்துக்கு பேரு திரும்பிப் பார்த்த ஓவியம்...''

''அது ட்ரிக் ஆர்ட்டா...? அப்படின்னா...?''



''ஒரு பெண்ணோட பின்பக்கம் மட்டும் தெரியற ஓவியம் ஸார் அது. முகம் தெரியாது. ஆனா அந்த ஓவியத்தை விட்டு கொஞ்சம் தள்ளி எழுபது டிகிரி கோணத்தில் நின்னு பார்த்தா - அந்த ஓவியம் திரும்பிப் பார்த்து சிரிக்கிற மாதிரி தெரியும்... இட்டாலி ஆர்ட்டிஸ்ட் ஒருத்தர் வரைஞ்சு கொடுத்த ஓவியம். விலை அம்பதாயிரம் ரூபாய்...''

திவாகரன் கேட்டார்.

''அந்த ஓவியத்தை வாங்கிட்டு போனது யாரு...?''

அபு கமலியைப் பார்க்க - கமலி திவாகரனிடம் சொன்னாள்.

''அந்த ஓவியத்தை வாங்கினவரோட பேரையும் அட்ரஸையும் கேட்டேன் ஸார்...! அதுக்கு அவர் அதெல்லாம் வேண்டாம். போர்ட்ராயிட்டை பேக் பண்ணுங்கன்னு சொல்லிட்டார்....''

''ஓவியத்தை வாங்கினவர் இவரா...?''

விக்ரமின் போட்டோவை எடுத்துக் காட்டினார் திவாகரன். கமலி பார்த்துவிட்டு தலையாட்டினாள். ''இவர் கிரிக்கெட் வீரர் விக்ரம். இவர் வரலை ஸார்....''

திவாகரன் எழுந்தார். ''திரும்பிப் பார்த்த ஓவியத்தை வாங்கிட்டு போன நபர் மறுபடியும் உங்க ஆர்ட் காலரிக்கு வந்தா... உடனடியா எனக்கு தகவல் கொடுங்க...''

''விஷயம் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா ஸார்?''

''ஸாரி... இது ரகசிய விசாரணை... இப்ப எதையும் சொல்றதுக்கு இல்லை....''

திவாகரனும் ரமேஷ்குமாரும் வெளியே வந்தார்கள். ஆர்ட் காலரியில் இப்போது கூட்டம் தெரிந்தது.

லிஃப்டில் இறங்கும்போது திவாகரன் சொன்னார்.

''நீங்க சொன்னது சரிதான் ரமேஷ்குமார். ஹாஸன் கொலை செய்யப்பட்டு ரம்யமாலா கடத்தப்பட்டதில் மூணாவது ஆள் ஒருத்தன் சம்பந்தப்பட்டிருக்கான்...''

''காண்டஸா கார் பின்சீட்ல உறைஞ்சு கிடந்த ரத்தத்தை ஃபாரன்ஸிக் டெஸ்ட்க்காக கொண்டு போயிருக்காங்க ஸார்... கிரிக்கெட் ப்ளேயர் விக்ரமோட ப்ளட் க்ரூப் ஏ. பாஸிட்டீவ்ன்னு அவனுடைய ப்ரதர் பத்மநாபன் சொல்லியிருக்கார். இப்ப ஃபாரன்ஸிக் ரிப்போர்ட்டைப் பார்த்தா கார்க்குள்ளே சிந்திக் கிடந்தது யாரோட ரத்தம்னு தெரிஞ்சுடும்...''

''ரம்யமாலாவோட ரத்த க்ரூப் என்னான்னு அவ அம்மாகிட்டே கேட்டீங்களா?''

''ம்... கேட்டேன்... அவ ரத்த க்ரூப் ஏ.பி.நெகட்டிவ்.''

ஜெமினி டவரை விட்டு வெளியே வந்து பார்க்கிங்கில் காத்திருந்த ஜீப்புக்குள் புகுந்தார்கள்.

ஜீப் அண்ணாசாலையின் நெரிசலுக்கு வந்தபோது - திவாகரன் கேட்டார்.

''அபுவைப் பத்தி என்ன நினைக்கறீங்க...?''

''போலீஸைப் பார்த்ததும் கில்ட்டி கான்ஷியஸ் உள்ளவங்களுக்கு ஒரு வித நெர்வர்ஸ்னெஸ் வரும். அது இவனுக்கு வரலை...''

''ஸோ... அவன் ஹார்ம்லெஸ்...''

''எஸ்...''

ஜீப் பத்து நிமிஷ பயணத்திற்கு பிறகு - ஃபாரன்ஸிக்கின் காவி கட்டிடத்திற்கு முன்பாய் ன்றது. இறங்கி பக்கவாட்டு மாடிப்படியில் ஏறி ராந்தாவை தொட்டபோது - ஃபாரன்ஸிக் பீஸர் எதிர்ப்பட்டார். திவாகரன் புன்னகைத் தார்.

''குட் மார்னிங் மிஸ்டர் வில்லியம்...''

''குட்மார்னிங் டி.எஸ்.பி.ஸார்...! நேற்றைய ம்பவ ரிப்போர்ட்டுக்காக வந்தீங்களா...?''

''எஸ்...''

''கார்ல சிந்திக்கிடந்த ரத்தம் ஏ.பாஸிடிவ் ரூப். ரத்தம் எக்கச்சக்கமா வெளியேறியிருக்கு... அடிபட்ட ஆள் பிழைச்சிருக்க வாய்ப்பே இல்லை.''

''அப்படீன்னா... அது கிரிக்கெட் ப்ளேயர் விக்ரமோட ப்ளட்...''

அதிர்ச்சியைக் காண்பித்த திவாகரன் வில்லியமை ஏறிட்டார்.

''டிட்... யூ... ஃபைன்ட்... எனி...ஃபிங்கர் பிரிண்ட்ஸ்?''

''நாட் ஃபவுண்ட்...காணோம். பெய்ஞ்ச மழை. ஒரு பிட் ஃபிங்கர் பிரிண்ட் கூட ட்ரேஸ் பண்ண முடியலை...''

''கார்ல சிந்தியிருந்த ரத்தத்தில் ஏ.பாஸிடிவ் தவிர வேற ப்ளட் க்ரூப் இருந்ததா...?''

''இல்லை... சிந்தியிருக்கிற ரத்தம் பூராவும் ஏ.பாஸிடிவ் ப்ளட் க்ரூப்தான்.''

''ரமேஷ்குமார்...'' டி.எஸ்.பி.நிமிர்ந்தார்.

''ஸார்...''

''இப்ப... விக்ரம் உயிரோட இல்லைன்னு நினைக்கிறேன்...''

''என்னோட பயமும் அதான் ஸார்...''

''நேத்து ராத்திரி நடந்த சம்பவங்களுக்குள்ளே மூணாவதா ஒரு ஆள் சாமர்த்தியமா

நுழைஞ்சிருக்கான்... கேஸை நாம பார்க்க வேண்டிய கோணம் இது இல்லை. வேற பக்க இருந்து பார்க்கணும்..."

## 14



உயரமாய் - ஒல்லியாய் எலும்பு தட்டிய முகத்தோடு இருந்த அவன் காரை விட்டு இறங்கினான். கதவுகளை லாக் செய்து கொண்டு - அந்த மத்தியான வேளையில் ரோட்டைக் கடந்து மெயின் ரோட்டையொட்டியிருந்த அந்த சந்துக்குள் நுழைந்தான்.

அந்த ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த சற்று சிதிலமான கட்டிடம் வந்தது. கட்டிடத்தில் முகப்பில் - பெயிண்ட் உதிர்ந்து போன - போர்டில் எழுத்துக்கள் தெரிந்தது.

**இங்கே சகலவிதமான**
**தைல எண்ணெய் வகைகள்**
**மொத்தமாகவும் சில்லறையாகவும்**
**விற்கப்படும்.**

வெறுமனே சாத்தியிருந்த கதவைத் திறந்து கொண்டு - அவன் உள்ளே போக -

உட்புறம் பூராவும் நிறைய கண்ணாடி ஜாடிகள், பேரல்கள், அவைகளுக்கு மத்தியில் லுங்கி கட்டிக் கொண்டு பீடி புகைத்த ஓர் ஆசாமி அவனைப் பார்த்ததும் புன்னகைத்தான்.

"வாங்க ஸார்..."

"ரெண்டு பேரல் வேணும்..."

லுங்கி ஆள் ஆச்சர்யப்பட்டான்.

"என்ன ஸார்... போன வாரந்தான் ரெண்டு பேரல் வாங்கிட்டு போனீங்க... அதுக்குள்ளார எண்ணெய் தீர்ந்து போச்சா...?"



"நிறைய ஸ்பெசிமென் வந்துடுச்சு... அதை ரிஸர்வ் பண்ண வேண்டாமா...?"

"உங்க வீட்டுக்குள்ளேயே மியூசியம் வெச்சிருக்கீங்களா ஸார்?"

"ஆமா... சின்னதா..."

பேரலைக் கொண்டு வர லுங்கி ஆசாமி உள்ளே போக - பணத்தை எண்ணினான்.

## 15



இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் வீட்டுக்கு வந்து தன்னுடைய இளம் மனைவி பரிமாறிய மத்தியானச் சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு - சற்று கண்ணயர்ந்தபோது - வீட்டின் பின்புறம் வேலைக்காரி கனகம் அவர் மனைவியோடு சத்தம் போட்டு அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்.

"மொத்தம் முப்பது பவுன் நகையம்மா... அத்தனையும் போச்சு. அந்தப் பொண்ணு அழுது முடிச்சப்ப பாக்க கோரமையா இருந்தது. வயித்துல ஆறு மாச குழந்தை வேற...."

"முதல்ல... உன்னோட சந்தேகத்தைச் சொல்லு..."

"எனக்கென்னமோம்மா... பக்கத்து வீட்டுக்காரி மேலதான் சந்தேகம்.

வீட்டுக்குப் பின்புறம் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு படுக்கையில் சாய்ந்திருந்த ரமேஷ்குமார் சட்டென்று எழுந்து உட்கார்ந்தார்.

'பக்கத்து வீட்டுக்காரி பார்த்துட்டே இருந்துட்டு பின்னாடி போய்....'

- இந்த வாசகம் மணல் ஸ்டிக்கர் மாதிரி ஒட்டிக் கொள்ள வேகவேகமாய் எழுந்து யூனிஃபார்ம்

அணிந்தார். பெல்ட்டை மாட்டி தலைக்கு தொப்பியைக் கொடுத்தபோது - மனைவி சந்தியா உள்ளே வந்தாள்.

ஆச்சர்யப்பட்டாள்.

''என்ன ரெஸ்ட் எடுக்காமே கிளம்பிட்டீங்க...?''

''ஒரு முக்கியமான வேலை ஞாபகத்துக்கு வந்தது....''

பைக் சாவியைத் தேடி எடுத்துக் கொண்டார்.

''என்னங்க...?''

''ம்...''

''வேலைக்காரி கனகம் வீட்டுக்குப் பக்கத்துல ஒரு பொண்ணோட நகையெல்லாம் திருட்டு போயிடுச்சாம்... அது பத்தி....''

''வந்து கேட்டுக்கிறேன்....''

ரமேஷ்குமார் வெளியே வந்து - ஹீரோ ஹோண்டாவை உதைக்க அது உடனே ஒரு பிடி புகை கக்கி புறப்பட்டது.

''வர லேட்டாகுமா...?''

மனைவி சந்தியா கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் ஹோண்டாவை சாலைக்கு கொண்டு வந்து - ஹோட்டல் 'சம்பர் ப்ரீஸை' நோக்கி விரட்டினார்.

இருபது நிமிஷ வேகம்.

ஹோட்டல் 'சம்மர் ப்ரீஸ்' வந்தது.

டூ வீலர்ஸ் பார்க்கிங்கில் ஹோண்டாவை சொருகி விட்டு ரிசப்ஷனுக்கு போனார். நெயில் பாலீஷ் பூச்சு விரல்களோடு - ரிஸீவரைப் பற்றி யாருடனோ பேசிக் கொண்டிருந்தவள் ரமேஷ்குமாரை பார்வையில் வாங்கியதும் - வேக வேகமாய் பேச்சை முடித்துக் கொண்டு ரிஸீவரை வைத்தாள்.



''எஸ்...''

ரமேஷ்குமார் குரலைத் தாழ்த்திக் கொண்டார்.

''ஒரு இன்பர்மேஷன் வேணும்...! நேத்து ராத்திரி துபாய் ஷேக் சூட் நெம்பர் எஸ்.5-ல் தானே தங்கியிருந்தார்....?''

''ஆமா...''

''அந்த எஸ்-5 கார்னர் ரூம் இல்லையா...?''

''ஆமாம்...''

''அதுக்கு பக்கத்து சூட் நெம்பர் ஃபோர்?''

''ஆமாம்...''

''நேத்து ராத்திரி அதில் யார் தங்கியிருந்தாங்க...?''

''யாரும் தங்கியிருக்கவில்லை. ரூம் வேகன்ட்....''

''அதுக்கு பக்கத்து சூட்...?''

''அதுவும் வேகன்ட்தான்.''

''சரி... ஷேக்கோட பி.ஏ.ஹாஸன் தங்கியிருந்த 509 ரூமுக்கு பக்கத்து ரூம்களான 508, 507 ரெண்டிலும் நேத்து ராத்திரி யார் தங்கியிருந்தாங்கன்னு சொல்ல முடியுமா...?''

லெட்ஜரைப் புரட்டினாள். ஒரு பக்கத்தில் பார்வையை நிறுத்தி சொன்னாள். ''507-ல் மிஸஸ் திரிவேணி தங்கியிருந்தாங்க. அவங்க ஒரு சமூக சேவகி. இன்னிக்கு காலையில பத்து மணிக்குத்தான் பெங்களூர் ஃப்ளைட்ல புறப்பட்டு போனாங்க...''

''சரி 508-ல் யார் 'ஸ்டே' பண்ணியிருந்தாங்க?''

''ஹரிஷ்....''

''ஹரிஷ் இன்னும் ரூம்ல இருக்காரா...?''

"அவர் விடியற்காலையில் ரூமை காலி பண்ணிட்டு போயிருக்கார்..."

"அட்ரஸ்...?"

"19 வி-வ்யூ அவென்யூ... ஈக்காட்டு தாங்கல்..."

"ஈக்காட்டு தாங்கல்?"

"எஸ்..."

"அப்படீன்னா... சென்னைதான். சென்னை அட்ரஸையே குடுத்திருக்கிற அந்த ஹரீஷ் எதுக்காக ஹோட்டல்ல ரூம் எடுத்து தங்கணும்...?"

"ஸார்... அந்த ஹரீஸ் போன மாசத்திலேயும் ஒரு தடவை இதே ஹோட்டல்ல ரூம் எடுத்து தங்கியிருந்தார்."

"எத்தனை நாள் தங்கியிருக்கார்...?"

"ரெண்டு நாள்..."

"இந்தத் தடவை அவர் இங்கே வந்து ரூம் எடுத்து எத்தனை நாளாயிற்று...?"

அவள் லெட்ஜரைப் பார்த்துவிட்டு சொன்னாள்.

"மூணு நாள்..."

"நீங்க ஹரிஷை பார்த்திருக்கீங்களா?"

"ம்..."

"எப்படியிருப்பார்...?"

"உயரமா... ஒல்லியா... தலைமுடி நார் நாரா பிரிஞ்சு காத்துல பறக்கற மாதிரி இருக்கும்...."

இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் அட்ரஸை தன் பாக்கெட் டயரியில் குறித்துக் கொண்டே கேட்டார்.

"ஆள் கார்ல வந்தாரா...?"

"ஆமா..."



"கார் நெம்பர்...?"

லெட்ஜரின் ஓரத்தை மறுபடியும் பார்த்து சொன்னாள்.

"TNS 4141 அம்பாஸிடர்..."

"தாங்க்யூ...."

ரமேஷ்குமார் டயரியை பாக்கெட்டில் சொருகிக் கொண்டு ஹோட்டலிலிருந்து வெளிப்பட்டு ஹோண்டாவை நோக்கிப் போனார்.

போகப் போக மனசுக்குள் ஒரு சின்ன நெருடல்.

டி.எஸ்.பி.க்கு தகவல் தெரிவித்துவிட்டு போகலாமா? ரமேஷ்குமார் மனசு மறுத்தது. "வேண்டாம்...! தகவல் சொன்னால் அவரும் வருவார். கொலையாளியைக் கண்டுபிடித்தால் - பேப்பரில் அவருடைய பெயரும் போட்டோவும் தான் வரும். இந்தக் கேஸை தனியாய் டீல் செய்து கொலையாளியைக் கண்டுபிடித்தால் அடுத்த வருஷ ப்ரமோஷனுக்கு வாய்ப்பு பிரகாசம்...!"

வேலைக்காரி கனகம் சொன்னது மறுபடியும் ரமேஷ்குமாரின் ஞாபகத்துக்கு வந்தது. "பக்கத்து வீட்டுக்காரி பின்னாடியே போய் ஆளை வெச்சு நகைகளை அடிச்சுட்டார்...!"

'அதே மாதிரி ஹாசனுக்கு பக்கத்து அறையில் தங்கியிருந்த ஹரிஷ் ஏதோ ஒரு பகையை மனசுல வெச்சுகிட்டு - ஹாஸனை பின்தொடர்ந்து ஏன் போயிருக்கக் கூடாது....'

'ஹரீஷின் வீட்டுக்குப் போய் - அவனுக்கு முன்பாய் நான் நின்றாலே போதும்... அவன் முகத்தில் தெரிகிற பாவம் அவன் எப்பேர்ப் பட்டவன் என்பதைக் காட்டிக் கொடுத்துவிடும்...'

ஹீரோ ஹோண்டா ஈக்காட்டு தாங்கலை நோக்கி பறந்தது.

## 16



ஈக்காட்டு தாங்கல் சவுக்குத் தோப்புகளோடு 'ஹோ'வென்று இருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் ஆள் நடமாட்டம் இல்லை.

பத்து நிமிஷத் தேடலில் -

19 எண்ணிட்ட பங்களா - கண்களுக்கு சிக்கியது. காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்தில் பைக்கை நிறுத்தி உள்ளே எட்டிப் பார்த்தார்.

பங்களாவும் அதன் சுற்றுப்புறமும் 'ஹோ' வென்று கிடந்தது. சரியாய் பராமரிக்கப்படாத தோட்டம். சிரத்தையோடு அமைத்திருந்த லான் காய்ந்து போயிருந்தது. போர்டிகோவில் அந்த அம்பாசிடர் காரைச் சுற்றிக் கொண்டு வாசல் கதவுக்கு வந்து காலிங் பெல் பொத்தானின் மேல் கையை வைத்தார்.

அது வீரிட்டது.

ரமேஷ்குமார் அரை நிமிஷ நேரம் காத்திருக்க-

''ப்ளக்...''

உள்ளே - தாழ்ப்பாள் விலக - கதவு மெல்ல பின்வாங்கியது.

அவன் நின்றிருந்தான்.

உயரமாய் - ஒல்லியாய் -

எலும்பு தட்டிய முகத்தோடு.

## 17



ரமேஷ்குமார் கேட்டார்.

''மிஸ்டர் ஹரீஷ்....?''



''நான்தான்...''

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்...''

''உள்ளே வாங்க...''

இயல்பாய் சொன்னாலும் - ஹரீஷின் முகம் உடனே வியர்ப்பதை கவனித்தார் ரமேஷ் குமார். ஹாலில் நடந்து சோபாவை நெருங்கினார்கள்.

''பீ... ஸிட்...''

உட்கார்ந்ததும் ஹரிஷ் கேட்டான்.

''என்ன விஷயமா வந்திருக்கீங்க இன்ஸ்பெக்டர்?''

''நேத்திக்கு ராத்திரி... ஹோட்டல் சம்மர் ப்ரீஸில் நீங்க தங்கியிருந்தீங்களா...?''

''ஆமா...''

''சென்னையில இருந்துகிட்டே எதுக்காக ஹோட்டல்ல போய் தங்கினீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

''எனக்கு அந்த ஹோட்டலோட அட்மாஸ்பியர் பிடிக்கும். மாசத்துக்கு ரெண்டு தடவையாவது... போய் ரெண்டு மூணு நாள் தங்கறதுண்டு...''

''உங்களுக்கு என்ன பிசினஸ்...?''.

ஹரீஷ் சிரித்தான்.

''நான் எதுக்காக பிசினஸ் பண்ணணும்...? தாத்தாவும் அப்பாவும் சம்பாதிச்ச வெச்சுட்டுப் போன சொத்து கோடிக்கணக்குல இருக்கு... அதை வெச்சு என் வாழ்க்கையை என்ஜாய் பண்ணிட்டிருக்கேன்... அபூர்வமான கலைப்பொருட்களை சேகரிக்கிறது என்னோட பொழுது போக்கு....''

''ஹாஸனை உங்களுக்கு தெரியுமா?''

''எந்த ஹாஸன்....?''

"துபாய் ஷேக் அர்ஷத்தோட பி.ஏ."

"எனக்கு அப்படி யாரையும் தெரியாது."

"நேத்திக்கு ராத்திரி ஹோட்டல் 'சம்மர் ப்ரீஸ்'ல ரூம் நெம்பர் ஐநூத்தி எட்டில்தானே தங்கியிருந்தீங்க...?"

"ஆமா..."

"அந்த ஹாஸன் ஐநூத்தி ஒன்பதில தங்கியிருந்தார்."

"எதுக்காக அந்த ஹாஸனைப் பத்தி என்கிட்ட விசாரிக்கறீங்க? அவர் ஏதாவது தப்பு பண்ணிட்டாரா...?"

"இல்லை..."

"தென்...?"

"கொலை செய்யப்பட்டிருக்கார்..."

"ஓ...!"

அதிர்ச்சி காட்டினான்.

ரமேஷ் குமார் உடனே மோப்பம் பிடித்தார்.

இது போலியான அதிர்ச்சி.

"மிஸ்டர் ஹரிஷ்...! ஹாஸன் கொலை செய்யப்பட்டது மட்டும் இல்லை. சினிமா நடிகை ரம்யமாலாவும் கடத்தப்பட்டிருக்கிறாள்."

"ஓ....ஹாரிபிள்...!"

"இது ஒரு பொதுப்படையான விசாரணை. உங்க வீட்டை கொஞ்சம் சுத்திப் பார்க்கலாமா...?"

"வித் பிளஷர்... வாங்களேன்...! என்னோட தாத்தா கட்டின வீடு இது. ரொம்பப் பழசு. ஆனா ஸ்ட்ராங்க்..."

கூட்டிக்கொண்டு போனான்.

ஹாலையொட்டின மாதிரி இருந்த பெரிய அறைக்குள் சுவரோரமாய் நீளமான மேஜைகள்



போடப்பட்டு - அவைகளின் மேல் தைலம் நிரப்பட்ட கண்ணாடி ஜாடிகள் தெரிந்தன. உள்ளே எது எதுவோ அசைந்தது.

அந்த தைலங்கள் துல்லியமான நீர் மாதிரி தெரிய - ரமேஷ் குமார் கேட்டார். "இதெல்லாம் என்ன...?"

"இது ஒரு சின்ன மியூஸியம் ஸார். விநோதமான பூக்கள், சின்னச் சின்ன பிராணிகள் இதுகளை கலெக்ட் பண்ணி - ஜாடியில இருக்கிற தைலத்தில் போட்டுட்டா... நூறு வருஷமானாலும் கெடாது."

ரமேஷ் குமார் அந்த ஜாடிகளில் அசையும் பிராணிகளை பார்த்துக் கொண்டே நடந்தார்.

"ஆமா...! ஹௌ ஈஸ் மை மியூஸியம் ஸார்?"

"ஃபைன்..." - சொல்லிக் கொண்டே திரும்பிய ரமேஷ்குமாரின் பார்வையில் எதிர்ப்பக்க சுவரில் மாட்டியிருந்த அந்த ஓவியம் பட்டது.

ஒரு பெண்ணின் பின்பக்கம் மட்டும் தெரிகிற ஓவியம்!

## 18



போலீஸ் ஸ்டேஷனில் டெலிபோன் அடித்தது.

"இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் இருக்காரா...?"

"அவர் மத்தியானம் லஞ்சுக்கு போனவர் இன்னும் வரலை ஸார்."

"வீட்டுக்குத்தானே... போயிருக்கார்...?"

"ஆமா ஸார்..."

''துபாய் ஷேக் கிட்டே ஃபர்தா என்கொயரிக்காக - ஹோட்டல் சம்மர் பிரீஸ்க்கு நான் கிளம்பிட்டிருக்கேன். அவர் ஸ்டேஷனுக்கு வந்ததும் அங்கே வரச் சொல்லிடுங்க.''

''எஸ்... ஸார்...''

டி.எஸ்.பி. ரிஸீவரை வைத்துவிட - சப். இன்ஸ்பெக்டர் ரிஸீவரை வைக்கவும் தோன்றாமல் - பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஹெட் கான்ஸ்டபிளிடம் நிமிர்ந்தார்.

''ஸார் லஞ்சுக்கு போனா... ரெண்டரை மணிக்குள்ளே ஸ்டேஷனுக்கு திரும்பிடுவாரு.. இன்னிக்கு மணி நாலாகப் போகுது... வரலையே...?''

## 19



ஹரீஷ் சிரித்தான்.

''என்ன ஸார்... அந்த ஓவியத்தையே அப்படி பார்க்கறீங்க? அது சாதாரண ஓவியம் இல்லை. திரும்பிப் பார்க்கும் ஓவிய்ம்...''

ரமேஷ்குமார் வேண்டுமென்றே திகைப்பு காட்டினார்.

''என்னது...? திரும்பிப் பார்க்கும் ஓவியமா?''

''ஆமா... ஸார்... அநத கார்னர்க்கு போய் நின்னு ஓவியத்தைப் பாருங்க...''

ரமேஷ் குமார் அந்த கார்னர்க்குப் போய் நின்னு தலை நிமிர்ந்து ஓவியத்தைப் பார்க்க - அந்த ஓவியப் பெண் திரும்பிப் பார்க்கிற போஸில் புன்னகைத்தாள்.

''என்ன ஸார்...? ஓவியத்தில் இருக்கிற பெண் திரும்பிப் பார்க்கிறாளா...?''



''ஆச்சர்யம்...! இது எப்படி... மிஸ்டர் ஹரீஷ்....?''

''இது ஒரு வகையான ட்ரிக் ஆர்ட் ஸார்... அதை வரைஞ்ச ஓவியனுக்கு மட்டும்தான் தெரியும்...''

''இந்த ஓவியத்தை அபு ஆர்ட் காலரியில வாங்கினீங்களா?''

''அட... கரெக்டா சொல்றீங்களே...? உங்களுக்கு எப்படி தெரியும்...?''

''அபு ஆர்ட் காலரியில போய் விசாரிச்சப்ப சொன்னாங்க...''

''விசாரிச்சீங்களா...! எதுக்காக விசாரிச்சீங்க...?''

''காண்டஸா கார்க்குள்ள நீ தவறவிட்ட மெட்டீரியல் ரெசீப்ட் எங்க கைக்கு கிடைத்தது. விசாரிக்காம இருப்போமா...?''

ஹரீஷின் முகம் கறுத்தது.

''நீ... நீங்க... என்ன சொல்றீங்க...?''

''உண்மையைச் சொல்றேன்'' புன்னகைத்த ரமேஷ்குமார் விநாடிக்கும் குறைவான நேரத்தில் - தன் சட்டையின் மார்புப் பகுதிக்குள் கையை நுழைத்து ரிவால்வரை எடுத்து நீட்டினார்.

''நான் குத்து மதிப்பா உன் மேல ஒரு சந்தேகப்புள்ளியை வெச்சேன். அது இப்ப சரியா போயிடுச்சு... இனிமே உன்கிட்டயிருந்து உண்மையை வரவழைக்கிறது ஒண்ணும் பெரிய காரியமல்ல. இந்த வீட்ல போன் எங்கேயிருக்கு?''

''ப...ப...பக்கத்து ரூம்ல...''

''என்னை கூட்டிகிட்டு போ...''

''வா...வாங்க...''

சொல்லிக் கொண்டே திரும்பிய ஹரீஷ் சற்றும் எதிர்பாராத வகையில் ரமேஷ் குமார்க்கு

பக்கத்தில் இருந்த மேஜையை ஓங்கி உதைக்க - அதன் மேல் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி ஜாடிகள் தெறித்தன. தரைக்கு மோதிக் கொண்டு 'ச்சலீர்' என்று சிதறின. தைல எண்ணெய் 'ப்ளாச்ச்' என்று உயர்ந்து பரவியது.

ரமேஷ்குமார் திகைத்த விநாடிகளில் ஹரீஷ் பாய்ந்தான்.

அவனை தடுக்க முயல்வதற்குள் முகத்தில் மூர்க்கமாய் அடிபட்டார். தலைக்குள் பொறி கலங்கியது.

வலியை ஜீரணித்து கண்களை திறப்பதற்குள் - ரமேஷ் குமாரின் அடிவயிற்றில் இடி மாதிரி ஒரு குத்து இறங்கியது.

பிரளயம் ஏற்பட்ட மாதிரி மூளைக்குள் இரைச்சல்.

ரமேஷ் குமார் துப்பாக்கியை நழுவ விட்டு சரிந்தார். ஹரீஷ் துப்பாக்கியை பொறுக்கிக் கொண்டு - வாயோரம் ரத்தம் கசியக் கிடந்த ரமேஷ்குமாரை காலால் புரட்டினான்.

சிரித்தான்.

''போலீஸ் புலியே...! இனி நீ கண்ணாடி பெட்டிக்குள் மிதக்கலாம்...''

## 20



டி.எஸ்.பி. திவாகரன் ஹோட்டல் ப்ரீஸுக்குள் நுழைந்து - ரிசப்ஷனில் நின்றிருந்த இளைஞனை நெருங்க அவன் 'விஷ்' செய்தான்.

''ஷேக் ரூம்ல இருக்காரா...?''

''இருக்கார் ஸார்...''

''அவர் கூட வேற யாராவது...?''



''இல்ல ஸார்...''

''நான் அவர்கிட்ட தான் பேசிட்டிருப்பேன். இன்னும் கொஞ்ச நேரத்துல இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் என்னை கேட்டுகிட்டு வருவார். அவரை ஷேக்கோட அறைக்கு அனுப்பி வையுங்க.''

''இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமாரா... ஸார்?''

''ஆமா...''

''மூணு மணி சுமார்க்கு இங்கே அவர் வந்திருந்தார் ஸார். எனக்கு அப்ப ட்யூட்டி டைம் கிடையாது. ரெஸ்ட் ரூமிலிருந்து பார்த்துட்டிருந்தேன். ரிசப்ஷன் கௌண்டர்க்கு வந்த மிஸ்டர் ரமேஷ்குமார் - அந்த சமயத்தில் ட்யூட்டியில் இருந்த ரிசப்ஷனிஷ்ட் மாலா கிட்டே பேசினார். அப்புறம் போயிட்டார்.''

''ரிசப்ஷனிஷ்ட் மாலா கிட்ட என்ன பேசினார்?''

''தெரியலை ஸார்...''

''மாலா இப்ப ஹோட்டல்ல இருக்காங்களா...''

''ட்யூட்டி முடிஞ்சு வீட்டுக்கு போயிட்டாங்க ஸார்...''

''வீடு எங்கே...?''

''அருண்டேல் நகர்ல...''

''ரொம்ப தூரம்... வீட்டுக்கு போன் இருக்கா!''

''இல்ல ஸார்...''

''சரி... நோ ப்ராப்ளம். ரமேஷ்குமார் விசாரணைக்காக ஏதாவது ஒரு பக்கம் போயிட்டு திரும்பவும் இந்த ஹோட்டலுக்கு வரலாம்... ஷேக்கோட அறைக்கு அனுப்பி வையுங்க...''

''எஸ்... ஸார்...''

ரிசப்ஷன் இளைஞன் தலையாட்ட திவாகரன் சற்றுத் தொலைவில் தெரிந்த லிஃப்ட்டை நோக்கிப் போனார்.

## 21



ரமேஷ்குமார்க்கு நினைவு திரும்பியபோது - தான் ஒரு நாற்காலியோடு சேர்த்து பிணைக்கப் பட்டிருப்பதை உணர்ந்தார். முகத்தில் தண்ணீர் அடிக்கப்பட்டிருக்க - பக்கத்திலேயே ஹரீஷ் நின்றிருந்தான். இடது கையில் ரிவால்வர்.

இந்த அறை கொஞ்சம் வித்தியாசமாய் தெரிந்தது. ஏதோ மன்னர் காலத்து பாதாளச் சிறைக்கூடம் மாதிரியான தோற்றம்.

ரமேஷ்குமார் சிரமப்பட்டு கண்களைத் திறக்க - பார்வைக்கு அந்த கண்ணாடித் தொட்டிகள் கிடைக்க.

கண்ணின் பார்வைகள் ஸ்தம்பித்தன.

ஒரு கண்ணாடித் தொட்டியில் ரம்ய மாலாவும், இன்னொரு கண்ணாடித் தொட்டியில் கிரிக்கெட் ப்ளேயர் விக்ரமும் நீளவாக்கில் தைல எண்ணெயில் மிதந்து கொண்டிருந்தார்கள்.

ஹரீஷ் சிரித்தான். ''என்ன மிஸ்டர் இன்ஸ்பெக்டர்? பார்க்கிற காட்சி அதிர்ச்சியா இருக்கா...! லேட்டஸ்ட்டா நான் ஆரம்பிச்சிருக்கிற புதிய ஹாபி இதுதான். எல்லாரும் புகழ் பெற்ற நபர்களோட ஆட்டோகிராஃபைக் கேட்பாங்க. இல்லேன்னா அவங்க கூட சேர்ந்து நின்னு போட்டோ எடுத்து ஆல்பத்துல வெச்சுக்குவாங்க. ஆனா என்னோட டேஸ்ட்டே வேற. ஆரம்பத்துல விநோத தாவரங்களையும், பிராணிகளையும் மட்டுமே தைல எண்ணெய்ல போட்டு ஸ்பெசி மென்களா மாத்திகிட்டு இருந்தேன். ஆனா இப்ப



எந்தெந்த துறையில யார் யார் ரொம்ப புகழோடு இருக்காங்களோ - அவங்களையெல்லாம் இங்கே கொண்டு வந்து ஸ்பெசிமென் பண்ணி வாழ்நாள் பூராவும் பார்த்து சந்தோஷப்பட்டுகிட்டு இருக்கப் போறேன். என் கையில் ஒரு லிஸ்ட் இருக்கு. அந்த லிஸ்ட்டை வெச்சுகிட்டு ஒவ்வொருத்தரையா இங்கே கொண்டு வரப்போறேன்.''

ரமேஷ்குமார் ஹரீஷ் பேசுவதைக் கேட்டு அதிர்ந்து போயிருக்க அவன் தொடர்ந்தான்.

''மாசத்துக்கு ரெண்டு தடவை ஹோட்டல் சம்மர் ப்ரீஸில் ரூம் எடுத்து தங்கறதுக்கு காரணம் அந்த ஹோட்டல்ல தங்க வர்ற முக்கியமான புகழ் வாய்ந்த ஆசாமிகள் யார் யார்ன்னு பார்த்து அவங்களை மடக்கத்தான். என்னோட அதிர்ஷ்டம் நேத்து ராத்திரி ஒரு சினிமா நடிகையும், கிரிக்கெட் ப்ளேயரும் கிடைச்சாங்க. ஒரே கல்லில் ரெண்டு மாங்காய் எப்படி அடிச்சேன்னு கேக்கறீங்கள் இன்ஸ்பெக்டர் ஸார்? சொல்றேன். நேத்து ராத்திரி பத்தேகால் மணி சுமார்க்கு - என் ரூமுக்கு பக்கத்து ரூமில் தங்கியிருந்த ஹாஸன் இண்டர்காம் டெலி போனில் ஷேக்கோட பேசிட்டிருந்ததை - அவரோட ரூமை க்ராஸ் பண்ணும்போது - லேசா திறந்திருந்த கதவு வழியா கேட்டுட்டேன். பத்தரை மணிக்கு கார்ல புறப்பட்டு போய் - ரம்யமாலாவை கூட்டிட்டு ரூமுக்கு வந்துட றேன்னு சொல்லிட்டிருந்தார். அரை நிமிஷ நேரம் நின்னு அந்தப் பேச்சைக் கேட்டப்ப - அது நடிகை ரம்யமாலான்னு புரிஞ்சுகிட்டேன். உடனே என் ரூமை பூட்டிகிட்டு - கார் பார்க்கிங்குக்குப்போய் என்னோட அம்பாசிடர்ல காத்துட்டிருந்தேன். ஹாஸன் கார்ல கிளம்பினார். அந்தக் காரை ஃபாலோ பண்ணி போக வேண்டியது. ரம்ய மாலாவை அந்த ஆள் கூட்டிகிட்டு வரும்போது வழி மறிச்சு ஹாஸனை சுட்டுக் கொன்னுட்டு

ரம்யமாலாவை கொண்டு போயிட வேண்டியது. நான் போட்ட திட்டம் இவ்வளவுதான். ஆனா நடந்தது என்ன தெரியுமா...? ஹாஸனுக்காக நான் அம்பாசிடர்ல காத்திட்டிருந்தப்ப - கிரிக்கெட் ப்ளேயர் விக்ரம் ஹோட்டலை விட்டு வெளியே வந்துட்டிருந்தான். அவன், கூட யாருமே இல்லை. தனியா வந்துட்டிருந்தான். நான் காரை விட்டு இறங்கி அவன் பின்னாடியே போனேன். கடைசியில் நின்னுட்டிருந்த அவனோட கண்டஸா கார்க்கு போனான். நான் வேகவேகமாக அவன் முன்னாடி போய் நின்று ''ஹலோ'' சொன்னேன். பதிலுக்கு ''ஹலோ'' சொல்லி சிரிச்சான். என்னோட ரசிகரான்னு கேட்டான். நான் ஆமான்னு சொல்லி - ஒரு நூறு ரூபாய் நோட்டை நீட்டி ஆட்டோகிராஃப் குடுக்கச் சொன்னேன். அவன் ஆட்டோகிராஃப் போட்டு குடுத்துட்டு - ரைவிங் சீட்டுக்கு போக குனிஞ்சான். நான் த்தும் முத்தும் பாத்தேன். ஆள் அரவமே டையாது. என் இடுப்புல மறைச்சு வச்சிருந்த துப்பாக்கியை எடுத்து - அதனோட பின்பக்கத்தை திருப்பி விக்ரமோட பிடரியில் ஓங்கி ஒரு அடி அடிச்சேன். அவன் சத்தமே காட்டாம விழுந் துட்டான். அதே காரோட பின் சீட்ல விக்ரமை தூக்கிப் போட்டேன். கார்ச்சாவியை அவன் சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்துக்கிட்டு - ட்ரைவிங் சீட்டுக்குப் போனேன். அதே கார்ல ஹாஸனை ஃபாலோ பண்ணி - ரம்யமாலாவை கடத்த தீர்மானிச்சேன். காத்திட்டிருந்தேன். ஹாஸன் பத்தரை மணிக்கு ஹோட்டலைவிட்டு வெளியே வந்தார். டாட்ஸன் கார்ல கிளம்பினார். நான் விக்ரமோட காண்டஸா காரில் ஃபாலோ பண்ணினேன்... அதுக்கப்புறம் நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே...?''

ரமேஷ் குமார் நாற்காலியோடு ஆத்திரமாய் எம்பினார்.



''நீ என்ன மனுஷனா... மிருகமா...''

ஹரீஷ் சிரித்தான்.

''எனக்கும் அடிக்கடி இந்த சந்தேகம் வரும்... எம் மனசுக்குள்ளே தோணறது எல்லாமே விபரீத எண்ணங்கள்தான். என்ன செய்யறது இன்ஸ் பெக்டர் ஸார். இப்பக்கூட பாருங்க... உங்களை முழு போலீஸ் யூனிஃபார்மோடு - தைல எண்ணெய்ல குளிப்பாட்டி கண்ணாடித் தொட்டியில் மிதக்க விடணும்னு ஆசை.''

நாற்காலியோட எம்பி ஹரிஷை உதைக்க முயற்சித்து தோற்றார் ரமேஷ்குமார். அவன் சிரித்தான்.

''ஸாரி இன்ஸ்பெக்டர்! சினிமாவில்தான் கதாநாயகன் ஜெயிப்பான். நிஜ வாழ்க்கையில் ஜெயிக்கிறது என்னவோ வில்லன்கள்தான். ஆழம் தெரியாம ஆத்துக்குள்ள காலை விட்ட மாதிரி விபரம் தெரியாம இந்த வீட்டுக்குள்ளே வந்துட்டீங்க. இது ஒன்வே ட்ராஃபிக் மாதிரி. வரத்தான் முடியும். திரும்பி போக முடியாது...'' சொன்ன ஹரீஷ் மயக்க மருந்த தெளிக்கப்பட்ட கர்ச்சீப்போடு - சேரில் பிணைத்திருந்த ரமேஷ் குமாரை நோக்கிப் போனான்.

## 22



ஷேக் அர்ஷத்திடம் அவருடைய அறையில் வைத்து டி.எஸ்.பி. சொல்லிக் கொண்டிருந்தார்.

''மிஸ்டர் அர்ஷத்...! நேற்று இரவு நடந்த சம்பவத்தில் நிறைய குழப்பங்கள். கிரிக்கெட் ப்ளேயர் விக்ரமின் காண்டஸா காரை யாரோ ஒருவன் உபயோகப்படுத்தி இந்தக் காரியங்களை செய்திருக்க வேண்டும் என்கிற முடிவுக்கு

போலீஸ் வந்திருக்கிறது. ஹாஸன் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ரம்யமாலா கடத்தப்பட்டு இருக்கிறாள். விக்ரம் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதும் தெரியவில்லை. நீங்கள் சரியான தகவல்களைக் கொடுத்தால்தான் இந்தக் கேஸில் மறைந்திருக்கிற குற்றவாளியை பிடிக்க முடியும்...''

ஷேக் டி.எஸ்.பி.யை பரிதாபமாய் பார்த்தார். ''எனக்கு தெரிந்த எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டேன்.''

## 23



மயக்க மருந்து தெளிக்கப்பட்ட கர்ச்சீப்போடு - ரமேஷ்குமாரை நெருங்கிய ஹரீஷ் தன் வலத கையில் வைத்திருந்த ரிவால்வரினால் அவருடைய மேவாயை நிமிர்த்தினான்.

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர்...! உங்க வாழ்க்கையோட கடைசி நிமிஷங்கள்ல இருக்கீங்க. இந்தக் கர்ச்சீப்பை உங்க முகத்துக்கு போர்த்தினா போதும் லேசா ஒரு மயக்கத்துக்கு போயிடுவீங்க. கையையும் காலையும் அசைக்கக்கூட முடியாது. உங்களை முழு யூனிஃபார்மோடு தூக்கி - அந்தக் கண்ணாடித் தொட்டியில் கிடத்துவேன். நீட்டமா படுக்க வைச்சு வாயில புனலை சொருகி - ஒரு லிட்டர் தைல எண்ணெய்யை வயித்துக்கு போற மாதிரி ஊத்துவேன். அது எதுக்குத் தெரியுமா....! வயித்துல இருக்கிற உள்ளுறுப்புகள் கெட்டுப் போகாம இருக்கத்தான்... அரை மயக்கத்தில் இருக்கிற நீங்க அந்த எண்ணெய்யை குடிக்கும் போதே மூச்சுத் திணறி செத்துப் போயிடுவீங்க... அதுக்கப்புறம் கண்ணாடி தொட்டி நிறைய எண்ணெய்யை ஊத்துவேன். நீங்க அழகா யூனிஃபார்மோட மிதப்பீங்க... புகழ்



பெற்றவங்களை மட்டும்தான் இங்கே ஸ்பெசிமனா கொண்டு வரணும்னு நினைச்சேன். நீங்க எக்ஸ்ட்ரா. இருக்கட்டும். உயிரோடு இருந்தா நீங்க கூட ஒரு காலத்துல டி.ஜி.பி லெவலுக்கு வர முடியுமே...''

சிரித்துக் கொண்டே சொன்ன -

ஹரீஷ் தன் இடது கையில் வைத்திருந்த கர்ச்சீப்பால் -

ரமேஷ்குமாரின் முகத்தை போர்த்த -

அவர் விநாடிக்கும் குறைவான நேரத்தில் -

கண்கள் சொருகினார்.

தலை ஒரு பக்கமாய் துவண்டது.

'கர்ச்சீப்பில் அதிகமாகவே தெளிச்சுட்டேன் போலிருக்கு...'

தனக்குள் முனகிக்கொண்டே ஹரீஷ், ரமேஷ்குமாரின் கயிற்றுக் கட்டுகளை அவிழ்த்து - அவரைத் தூக்கி கண்ணாடித் தொட்டியில் கிடத்தினான்.

கிடத்தும்போது -

ரமேஷ்குமாரின் சட்டைப் பாக்கெட்டிலிருந்து -

அந்த சாவி விழுந்தது.

## 24



டி.எஸ்.பி. திவாகரன் ஷேக்கிடம் விசாரணையை முடித்துக் கொண்டு வெளியே வந்தார். லிஃப்டில் பயணித்து ரிசப்ஷனை நெருங்கியவர் அங்கிருந்த இளைஞனிடம் சொன்னார். ''நான் கிளம்பறேன்...! இன்ஸ்பெக்டர்

ரமேஷ்குமார் என்னை தேடிட்டு வந்தா ஹெட்க்வாட்டர்ஸுக்கு வரச் சொல்லுங்க...''

''எஸ்... ஸார்...''

திவாகரன் நகர்ந்து போனார்.

ரிசப்ஷனிஷ்ட் இளைஞன் கீ- போர்டு பக்கமாய் திரும்பி சாவிகளை சரி பார்க்க ஆரம்பித்தான்.

இரண்டு நிமிஷம் கழிந்திருக்கும்.

ரிசப்ஷனிஸ்ட் மாலா மூச்சிரைக்க வேக வேகமாய் வந்தாள். போர்டிக்கோவில் ஆட்டோ நின்றது.

இளைஞன் திரும்பிப் பார்த்து ஆச்சர்யப் பட்டான்.

''என்ன மிஸ் மாலா... ட்யூட்டி முடிஞ்சு போனீங்க... திரும்பவும் வர்றீங்க...?''

''வீட்டுச் சாவியை வெச்சுட்டு போயிட்டேன். ட்ராயர்ல இருக்கான்னு பாருங்க...''

அவன் மேஜை ட்ராயரை இழுத்துப் பார்த்தான்.

''சாவி இருக்கு...''

''தேங்க் காட்...! பஸ்ஸில போயிட்டிருக்கும் போதுதான் ஞாபகத்துக்கு வந்தது. உடனே இறங்கி ஆட்டோ பிடிச்சுட்டேன்.''

சாவியை வாங்கிக் கொண்டு நகர முற்பட்ட மாலாவை ''ஒரு நிமிஷம் மிஸ் மாலா'' என்று சொல்லி நிறுத்தினான்.

''என்ன?''

''இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் உங்ககிட்ட வந்து என்ன கேட்டுட்டு போனார்...?''

''ஹாஸன் தங்கியிருந்த அறைக்கு பக்கத்து அறையில் யார் தங்கியிருந்தாங்கன்னு கேட்டார். விபரம் சொன்னேன்...''



''எதிர்ல டி.எஸ்.பி.யைப் பார்த்தீங்களா?''

''பார்த்தேன்... பைக்ல போயிட்டிருந்தார்.''

இளைஞன் 'உச்' கொட்டினான். ''ஒரு நிமிஷம் இருந்திருந்தார்ன்னா அவர்கிட்ட விஷயத்தை சொல்லி இருக்கலாம்... அதுக்குள்ள போயிட்டார். மறுபடியும் போன் பண்ணி கேட்டார்ன்னா சொல்லலாம்...''

''நான் வர்றேன்... மிஸ்டர் பாலு... ஆட்டோ வெயிட்டிங்கில் இருக்கு. இனி டெர்மினஸ்ல போய்த்தான் பஸ்ஸை பிடிக்கணும்...''

மாலா கிளம்பிவிட - லக்கேஜ்களோடு வந்த புது கஸ்டமர் ஒருவரை உபசரிக்கும் பணியில் ஈடுபட்டான் அந்த இளைஞன்.

## 25



கீழே விழுந்த சாவியைக் கையில் எடுத்தான் ஹரிஷ்.

அது ஹீரோ ஹோண்டா பைக் சாவி. ரமேஷ் குமார் வந்த பைக்.

ஹரீஷுக்கு பொறி தட்டியது.

'பைக் வீட்டு வாசலில் அல்லவா நிற்கிறது?' அந்த நிலவறைக் கதவைத் திறந்தபடி - வேகவேகமாய் வெளியே வந்தான். ஹாலில் நடந்து வாசலுக்கு வந்து - கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.

காம்பௌண்ட் கேட் அருகே -

ரமேஷ்குமார் வந்த ஹீரோ ஹோண்டா நின்றிருந்தது.

ஹரீஷ் வெளியே வந்தான்.

வெளிச்சம் மங்கிக் கொண்டிருந்த சாயந்தர வேளை. ஆள் நடமாட்டம் அறவே இல்லை.

ஹீரோ ஹோண்டாவை நெருங்கியவன் - சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு - அதன் தொண்டைக்கு சாவியைக் கொடுத்து - திருகினான். லாக் விடுபட்டதும் அதைத் தள்ளிக் கொண்டு வேகவேகமாய் பங்களாவின் பின் பக்கத்துக்கு போனான். கைப்பிடி சுவர் இல்லாத ஒரு பழங்காலத்து கிணறு நூறு அடி ஆழத்துக்கு 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டு தெரிய அதன் வாய்க்குள் பைக்கை தள்ளிவிட்டான்.

மிகப்பெரிய 'தொபுக்' சத்தத்தோடு - கிணற்றுக்குள் விழுந்து நீரில் மூழ்கியது பைக். கிணற்றை எட்டிப் பார்த்து புன்னகைத்த ஹரீஷ் ஓட்டமும் நடையுமாய் பங்களாவுக்கு திரும்பினான்.

ஹால் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே போனான். தரையோடு தரையாய் பதித்திருந்த நிலவறைக் கதவை திறந்து கொண்டு கீழே இறங்கினான். கண்ணாடித் தொட்டியில் கிடத்தப்பட்டிருந்த ரமேஷ்குமாரை நெருங்கி - புன்னகைத்தான்.

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர்...! உங்க வாகனம் உங்களுக்கு முன்னாடி போய் சேர்ந்துடுச்சு... கவர்ன்மெண்ட் லோன்ல வாங்கின வண்டியா...? புதுசா இருந்தது'' சிரித்துக் கொண்டே சொன்னவன் - புனலை எடுத்து ரமேஷ்குமாரின் வாயில் சொருகினான்.

''இனி... நீங்க எண்ணெய்யை குடிக்கலாம்....''

தைல எண்ணெய் பாட்டிலை எடுப்பதற்காக குனிந்த ஹரீஷ் பின்னால் அந்த சத்தம் கேட்டு திரும்பினான்.



நிலவறைப் படிகளின் அருகே -

அந்த உருவம் தெரிந்தது.

கையில் ரிவால்வர்.

## 26



ஹரீஷ் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''யா...யாரது...?''

உருவம் முன்னால் இரண்டடி வந்தது. ஹரீஷ் அதிர்ச்சியாய்க் கத்தினான்.

''யா...யார்... நீ...?''

உருவம் இன்னும் ஓரடி முன்னால் வந்தது.

''நான் விக்ரமோட அண்ணன் பத்மநாபன்...''

ஹரீஷ் இப்போது பயம் தெளிந்து சிரித்தான். ''ஓ...! தம்பியைத் தேடிகிட்டு வந்தியா...! வா...வா...''

''அங்கேயே நில்லு... என் பக்கத்துல வராதே...''

ஹரீஷ் வந்தான்.

''வராதே...!''

வந்தான்.

பத்மநாபன் ரிவால்வரை தாழ்த்தி - ஹரீஷின் முழங்காலுக்குக் கீழே சுட ஹரீஷ் துள்ளி விழுந்து மடங்கினான்.

கணுக்காலில் ரத்தம். ''ஸ்ஸ்... ஸ்ஸ்'' என்று வலியை வெளிப்படுத்தி அரற்றியவனை பத்மநாபன் நெருங்கினான்.

''என்னோட தம்பி விக்ரமுக்கு என்னாகியிருக்கும்கிற கவலையில் மத்யானம் ஹோட்டல்

சம்மர் ப்ரீஸுக்கு வந்து - பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணியவர்களை விசாரிச்சிட்டிருந்தேன். அந்த சமயத்துலதான் இன்ஸ்பெக்டர் ரமேஷ் குமார் பைக்ல வேகமாக வந்தார். ரிசப்ஷனிஷ்ட் கிட்டே ஏதோ கேட்டார். அவள் லெட்ஜரைப் பார்த்துட்டு ஏதோ சொல்ல அவர் டயரியில் அதை குறிச்சுகிட்டு பைக்கை நோக்கி வேகவேகமாக போனார். அவர் எங்கே போறார்ன்னு தெரிஞ்சுக்க எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. அவருக்கு தெரியாமே ஃபாலோ பண்ணிட்டு வந்தேன். ரமேஷ்குமார் இந்த பங்களாவுக்குள்ளே நுழைந்தார். நான் வெளியே ஸ்கூட்டரை மறைவா நிறுத்திகிட்டு வாட்ச் பண்ணினேன். உள்ளே போன ரமேஷ்குமார் ரொம்ப நேரம் வரைக்கும் வெளியே வராதது எனக்கு சந்தேகமா இருந்தது. அந்த சந்தேகத்தை உறுதிப்படுத்தற மாதிரி - கொஞ்ச நேரத்துக்கு முந்தி நீ வெளியே வந்து திருட்டுப் பார்வை யோடு - சுற்றும் முற்றும் பார்த்து - பைக்கை தள்ளிட்டு உள்ளே போனே. கிணற்றுக்குள்ளே தள்ளிவிட்டே. நீ கிணற்றடியில இருந்த சமயம் - நான் இந்த பங்களாவுக்குள்ள நுழைஞ்சிட்டேன். என் தம்பி விக்ரமுக்கு நேர்ந்த ஆபத்துக்குப் பின்னாடி - நான் என் தற்காப்புக்காக துப்பாக்கியை வெச்சுகிட்டது உன்னை வீழ்த்த உதவியிருக்கு...''

- சொன்ன பத்மநாபன் அங்கே கிடந்த கயிற்றை எடுத்து -

ஹரீஷின் கைகால்களை பிணைத்து குண்டுகட்டாய் கட்டினான்.

கேட்டான்.

''இந்த பங்களாவில டெலிபோன் எங்கே இருக்கு...?''

ஹரீஷ் தோட்டா வலியோடு சொன்னான்.



**போ**லீஸ் ஹெட்க்வார்ட்டர்ஸ்.

''உங்களுக்கு இன்ஃபார்ம் பண்ணாமே... தனியே அந்த ஹரீஷ் வீட்டுக்கு போனது பெரிய தப்புத்தான் ஸார்...''

ரமேஷ்குமார் தலை குனிந்து கொண்டு சொல்ல - டி.எஸ்.பி.திவாகரன் அவருடைய தோளைத் தட்டினார். ''ஒரு போலீஸ்காரனுக்கு துணிச்சல் இருக்க வேண்டியது அவசியம்தான். ஆனா அந்த துணிச்சலில் புத்திசாலித்தனமும் இருக்கணும்.''

''இனிமே இருக்கும் ஸார்...''

''குட்... பக்கத்து ரூம்ல நிருபர்கள் வெயிட் பண்ணிட்டிருக்காங்க. அவங்க கேக்கற கேள்விகளுக்கு நீங்க தான் பதில் சொல்லப் போறீங்க... ஹரீஷ் ஒரு மனநோயாளியா இருந்த விஷயம் அவரோட ஃபேமிலி டாக்டர் சங்கமேஸ்வரன் மூலமா கிடைச்ச தகவலையும் சொல்லுங்க... இந்த கேஸுக்கு அதுதான் முக்கியமான பாயிண்ட்...''

''எஸ்... ஸார்...''

''அப்புறம்...''

''சொல்லுங்க ஸார்...''

''நம்ம போலீஸ் டிபார்ட்மெண்ட் சார்பில் பத்மநாபனுக்கு ஒரு சின்ன பாராட்டுக் கூட்டத்தை ஏற்பாட பண்ணணும்...அதுக்கான முயற்சியை நீங்கதான் எடுத்துக்கணும்.''

''கண்டிப்பா... ஸார்...''

டி.எஸ்.பி. திவாகரனுக்கு சுரீரென்று ஒரு சல்யூட் அடித்துவிட்டு பக்கத்து அறையில் காத்திருந்த நிருபர்களை பார்க்கப் போனார் ரமேஷ் குமார்.

**(முற்றும்)**